ஜனவரி 2020

விண்மீன் .காம்

# நான்காவது வார நடப்பு நிகழ்வுகள்

22 ஜனவரி – 31 ஜனவரி

www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1.பன்னாட்டு செலவாணி நிதியம் (IMF) மதிப்பிட்டுள்ளபடி, நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் என்ன?**

அ. 5.2 %

ஆ. 5.8 %

**இ. 4.8 % ☑**

ஈ. 4.0 %




❖ நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.8 சதவீதமாக இருக்கும் என்று பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF) மதிப்பிட்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.1 சதவீதமாக இருக்கும் என IMF கடந்த அக்டோபரில் மதிப்பிட்டிருந்த நிலையில், அதனை தற்போது குறைத்துள்ளது. அதேபோல், 2020–21 நிதியாண்டில் வளர்ச்சி 5.8 சதவீதமாகவும், 2021–22 நிதியாண்டில் வளர்ச்சி 6.5 சதவீதமாகவும் இருக்கும் எனத் தெரிவித்துள்ளது.

❖ நடப்பு நிதியாண்டில் உலகின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 2.9 சதவீதமாக இருக்கும் எனவும் அடுத்தடுத்த நிதியாண்டுகளில் முறையே 3.3%, 3.4% ஆக இருக்கும் எனவும் IMF மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் வங்கிசாராத நிதித்துறையில் நிலவும் சிக்கலால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தின் மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளதாக IMF தெரிவித்துள்ளது.

**2.வேளாண் அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, 2018–19ஆம் ஆண்டில் காய்கறி உற்பத்தியில் முதலிடம் வகித்த இந்திய மாநிலம் எது?**

அ. உத்தரபிரதேசம்

ஆ. பீகார்

இ. ஒடிசா

**ஈ. மேற்கு வங்கம் ☑**



❖ அண்மையில், 2018–19ஆம் ஆண்டுக்கான மாநில வாரியான தோட்டக்கலை உற்பத்தித் தரவுகளை வேளாண் அமைச்சகம் வெளியிட்டது. தரவுகளின்படி, 29.55 மில்லியன் டன்கள் (mt) காய்கறிகளை கடந்த ஆண்டில் உற்பத்திசெய்து மேற்கு வங்க மாநிலம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

❖ 2018–19ஆம் ஆண்டில், நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த காய்கறி உற்பத்தியில், 15.9 சதவீதம், இந்த மாநிலத்திலிருந்தே பெறப்பட்டுள்ளது. 2017–18இல் உத்தரபிரதேச மாநிலம் முதலிடம் பிடித்திருந்தது, இந்த ஆண்டு 27.71 mt காய்கறி உற்பத்தியுடன் அம்மாநிலம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

❖ பழங்கள் உற்பத்தியைப் பொறுத்தவரை, 17.61 mt பழங்கள் உற்பத்தி செய்து ஆந்திரபிரதேச மாநிலம் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. 10.82 mt பழங்கள் உற்பத்தியுடன் மகாராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**3.பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) புதிய நிர்வாக இயக்குநராக அண்மையில் நியமிக்கப்பட்டவர் யார்?**



அ. சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டி ☑

ஆ. ரஜ்னிஷ் குமார்

இ. அதானு குமார் தாஸ்

ஈ. சஞ்சீவ் சதா

❖ சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டியை பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) நிர்வாக இயக்குநராக நியமிப்பதற்கான நிதி சேவைகள் துறையின் முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவையின் நியமனக்குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது, நாட்டின் மிகப்பெரிய கடன் வழங்குநரின் துணை நிர்வாக இயக்குநராக பணியாற்றி வரும் சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டி, SBIஇன் நிர்வாக இயக்குநராக 3 ஆண்டுகாலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். SBIஇன் நிர்வாக இயக்குநராக இருந்த அன்சுலா காந்த், கடந்த ஆண்டு, உலக வங்கியின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை நிதி அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார்.

**4.உலகப்பொருளாதார மன்றத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட, 'சமூக இயக்கக்குறியீடு – Social Mobility Index'இல் இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

அ. 56

ஆ. 66

இ. 76 ☑

ஈ. 86

❖ அண்மையில் வெளியிடப்பட்ட உலகப்பொருளாதார மன்றத்தின் சமூக இயக்கக்குறியீட்டில், 82 நாடுகளுள் இந்தியா 76ஆவது இடத்தைப்பிடித்துள்ளது. முதன்முறையாக வெளியிடப்படும் இந்தக் குறியீட்டில், டென்மார்க் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

❖ நலவாழ்வு, கல்வி, தொழில்நுட்பம், வேலை மற்றும் பாதுகாப்பு மற்றும் நிறுவனங்கள் என ஐந்து முக்கிய பரிமாணங்களில் இந்த நாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இந்தக்குறியீட்டின்படி, உலகின் மிகவும் சமூக இயக்கமிகு சமூகங்கள் அனைத்தும் ஐரோப்பிய நாடுகளாக உள்ளன. டென்மார்க், நார்வே, பின்லாந்து, சுவீடன் மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகள் முதல் ஐந்து இடங்களைப் பிடித்துள்ளன.

**5. 'கவனிப்பதற்கான நேரம் – Time to Care' என்ற அறிக்கையை சமீபத்தில் வெளியிட்ட அமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. ஆசிய வளர்ச்சி வங்கி

இ. Oxfam, தன்னார்வ தொண்டு நிறுவனம் ☑

ஈ. பிரதம், தன்னார்வ தொண்டு நிறுவனம்

❖ உலகளாவிய ஏற்றத்தாழ்வுகளை மையமாகக்கொண்ட 'கவனிப்பதற்கான நேரம்' என்ற அறிக்கையை தொண்டுநிறுவனங்கள் & உரிமைகள் குழுவின் கூட்டமைப்பான Oxfam அண்மையில் வெளியிட்டது.

கடந்த பத்தாண்டுகளில் கோடீசுவரர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ள நிலையில், உலக அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஆழமாக வேரூன்றியுள்ளதாக அந்த அறிக்கை கூறியுள்ளது.

- மொத்தம் 63 இந்திய பில்லியனர்களின் செல்வநிலை, 2018–19 நிதியாண்டிற்கான மொத்த இந்திய வரவுசெலவுத் திட்டத்தைவிடவும் (₹24,42,200 கோடி) அதிகமாக உள்ளது என்பதையும் இவ்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. உள்ளடக்கிய வளர்ச்சிக்கு பாலின ஏற்றத்தாழ்வுகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவ்வறிக்கை பரிந்துரை செய்துள்ளது.

**6.இந்திய நிறுவனங்களின் செயலாளர்கள் நிறுவனத்தின் (ICSI) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



**அ. ஆஷிஷ் கர்க் ☑**

ஆ. ஆதித்யா கர்க்

இ. நாகேந்திர ராவ்

ஈ. நரேந்திர ராவ்

- இந்திய நிறுவனங்களின் செயலாளர்கள் நிறுவனம் (ICSI) சமீபத்தில் 2020ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக ஆஷிஷ் கர்க்கை நியமித்தது. ICSIஇன் மற்றொரு உறுப்பினரான நாகேந்திர D இராவ், ICSI நிறுவனத்தின் துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆஷிஷ் கர்க், ICSIஇன் மத்திய கவுன்சிலுக்கு 2015–18ஆம் ஆண்டுகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

- தற்போது, 2019–22ஆம் ஆண்டுகாலத்திற்கு அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ICSI என்பது இந்திய நிறுவனச் செயலாளர்களின் பணியை மேம்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான ஒரு சட்ட அமைப்பாகும். இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.

**7. அண்மைய UNCTAD அறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் அதிக நேரடி அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்த்த நாடு எது?**




அ. இந்தியா

ஆ. சீனா

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. சிங்கப்பூர்

- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐ.நா கூட்டமைப்பு (UNCTAD) அண்மையில் தனது 'உலகளாவிய முதலீட்டு போக்கு கண்காணிப்பு அறிக்கை'யை வெளியிட்டதோடு அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்த்ததன் அடிப்படையில் நாடுகளை அது பட்டியலிட்டது. இவ்வறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் $251 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்து ஐக்கிய அமெரிக்க நாடுகள் முதலிடத்தைப் பெற்றது.

- 2019ஆம் ஆண்டில், $140 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்து, சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2019ஆம் ஆண்டுக்கான பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்த நாடுகளுள் இந்தியாவும் உள்ளது; அது, $49 பில்லியன் டாலர் அளவுக்கு அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்துள்ளது.

இது, முந்தைய ஆண்டின் அந்நிய நேரடி முதலீட்டை விட 16% அதிகம். இந்தியாவின் அந்நிய நேரடி முதலீட்டின் பெரும்பகுதி அதன் சேவைத்துறைக்குச்சென்றதாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

**8.ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பானது அண்மையில் தனது, 'UNWTO உலக சுற்றுலா காற்றழுத்தமானி அறிக்கை'யை வெளியிட்டது. UNWTOஇன் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?**

அ. பாரிஸ்

**ஆ. மாட்ரிட் ☑**

இ. டோக்கியோ

ஈ. நியூயார்க்

- ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு என்பது ஸ்பெயினின் மாட்ரிட்டை தலைமையிடமாகக் கொண்ட, நிலையான சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான ஐ.நா. நிறுவனமாகும். சர்வதேச சுற்றுலா குறித்த விரிவான அறிக்கையை UNWTO அண்மையில், 'UNWTO உலக சுற்றுலா காற்றழுத்தமானி அறிக்கை – World Tourism Barometer Report' என்ற தலைப்பில் வெளியிட்டது.
- அந்த அறிக்கையின்படி, கடந்த 2019ஆம் ஆண்டில் உலகெங்கிலும் 1.5 பில்லியன் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 4 சதவீதம் அதிகமாகும். தொடர்ச்சியாக பத்தாவது ஆண்டாக இது அதிகரித்து வருகிறது. 2020ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சி 3–4% வரை இருக்கும் எனவும் UNWTO கணித்துள்ளது.

**9.பரோடா வங்கியின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை நிர்வாகியாகவும் நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. சல்லா ஸ்ரீனிவாசுலு செட்டி

ஆ. ரஜ்னிஷ் குமார்

இ. அதானு குமார் தாஸ்

**ஈ. சஞ்சீவ் சதா ☑**



- சஞ்சீவ் சதாவை பொதுத்துறை வங்கியான பரோடா வங்கியின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை நிர்வாகியாகவும் அமைச்சரவை நியமனக்குழு நியமித்தது. இந்நியமனத்திற்கு முன்பு, SBI மூலதனச் சந்தைகளில் துணை நிர்வாக இயக்குநராக சஞ்சீவ் சதா பணியாற்றிவந்தார்.
- இதுதவிர இரண்டு முக்கிய நியமனங்களும் செய்யப்பட்டுள்ளன; அதில், கனரா வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாகியாக லிங்கம் வெங்கட் பிரபாகர் மற்றும் பாங்க் ஆப் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக அதானு குமார் தாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டதும் அடங்கும். இந்நியமனத்திற்கு முன்பு, லிங்கம் வெங்கட் பிரபாகர் பஞ்சாப் தேசிய வங்கியின் நிர்வாக இயக்குநராக பணியாற்றிவந்தார். அதானு குமார் தாஸ், பாங்க் ஆப் இந்தியாவின் நிர்வாக இயக்குநராக இருந்தார்.

**10.அண்மையில் காலமான மன் மோகன் சூத், எந்தத் துறையைச் சார்ந்தவர்?**



அ. இசை

ஆ. விளையாட்டு ☑

இ. இலக்கியம்

ஈ. அரசியல்

❖ 80 வயதான முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும், தேசிய தேர்வுக் குழுவின் உறுப்பினருமான மன் மோகன் சூத் அண்மையில் காலமானார். 06-07-1939 அன்று இலாகூரில் (தற்போது பாகிஸ்தானில் உள்ளது) பிறந்த அவர், இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு டெஸ்ட் ஆட்டத்திலும், 39 முதல் தர போட்டிகளிலும் விளையாடியுள்ளார். அவர், தில்லி மற்றும் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் (DDCA) நிர்வாகியாகவும், தேசிய தேர்வுக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ ஜனவரி.20-31 வரை 31ஆவது சாலைப் பாதுகாப்பு வாரத்தைக் கடைப்பிடிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

### 1.கிரீன்பீஸ் இந்தியாவின் அண்மைய அறிக்கையின்படி, இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரம் எது?

அ. குருகிராம்

**ஆ. ஜாரியா ☑**

இ. லக்னோ

ஈ. நொய்டா



❖ கிரீன்ஸ்பீஸ் இந்தியா என்ற சுற்றுச்சூழல் தன்னார்வ தொண்டுநிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி, ஜார்கண்டில் உள்ள ஜாரியா என்னும் ஒரு நகரம், இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரமாக உள்ளது. அதைத்தொடர்ந்து அதே மாநிலத்தைச் சேர்ந்த தன்பாத் என்னும் நகரம் உள்ளது.

❖ நாட்டின் மிகவும் மாசுபட்ட பத்து நகரங்களுள் ஆறு நகரங்கள், உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ளன என்றும் இவ்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. மிசோரம் மாநிலத்தின் லுங்லே நகரம் மிகக்குறைவான மாசுபட்ட நகரமாக உள்ளது. மேலும், அந்நகரம் உலக நலவாழ்வு அமைப்பின் பரிந்துரைக்கப்பட்ட மட்டத்தில் துகள்மப்பொருள் (PM) அளவைக்கொண்ட ஒரே நகரமாகும்.

❖ மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தரவையும், 287 நகரங்களின் துகள்மப்பொருள்கள் தரவின் பகுப்பாய்வையும் பயன்படுத்தி, கிரீன்பீஸ் இந்தியா, இந்தியாவில் உள்ள மிகவும் மாசுபட்ட நகரங்களை வரிசைப்படுத்தியுள்ளது.

### 2.விவசாய நில குத்தகைக்கொள்கையை அமல்படுத்திய நாட்டின் முதல் மாநிலம் எது?

**அ. உத்தரகண்ட் ☑**

ஆ. பீகார்

இ. ஒடிசா

ஈ. மேற்கு வங்கம்

❖ உத்தரகண்ட் மாநில அரசு அண்மையில் விவசாய நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான கொள்கையை உருவாக்கியுள்ளதாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. இதுபோன்ற ஒருகொள்கையை நடைமுறைப்படுத்திய முதல் இந்திய மாநிலம் என்ற பெருமையை இதன்மூலம் அம்மாநிலம் பெற்றது.

❖ இந்தக்கொள்கையின்படி, குத்தகைக்கு விடப்பட்ட நிலமானது 30 ஏக்கருக்கும் குறைவாக இருந்தால், எந்தவொரு நிறுவனம், நிறுவனம் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனம் விவசாய நிலங்களை 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுக்கலாம். நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் குத்தகைக்கு விடப்பட்ட காலத்தில் அதற்கான வாரத்தைப் பெறுவார்கள். மலைப்பகுதிகளில் விவசாயம் மற்றும் தோட்டக் கலைக்கு குத்தகைக்கு எடுப்பதில் உள்ள சிக்கல்கள் மற்றும் துண்டுதுண்டான நிலங்களை ஒருங்கி –ணைத்தல் ஆகியவை இந்தக்கொள்கையால் தீர்க்கப்படுகின்றன.

**3.இந்திய இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ள உள்நாட்டு பீரங்கி துப்பாக்கிகளின் பெயரென்ன?**

**அ. ஷரங் ☑**

ஆ. ஸ்ரீரங்

இ. சேவக்

ஈ. சேனக்



- இந்திய இராணுவத்தின் அண்மைய அறிவிப்பின்படி, உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட 18 'ஷரங்' பீரங்கித் துப்பாக்கிகளின் முதல் தொகுதி 2020 மார்ச் 31ஆம் தேதிக்குள் இராணுவத்தில் சேர்க்கப்பட உள்ளன. உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட இந்தத் துப்பாக்கியின் குழல், 130 மி.மீ முதல் 155 மி.மீ வரை மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, துப்பாக்கியின் தாக்கும் வீச்சு, 12 கிலோமீட்டர் அதிகரித்து 39 கிலோமீட்டராக உள்ளது.
- ஜபல்பூரில் உள்ள பீரங்கி அடித்தள வடிவமைப்பு தொழிற்சாலைக்கு, 'ஷரங்' பீரங்கித் துப்பாக்கியை மேம்படுத்துவதற்கான உலகளாவிய ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், படைக்கருவி தொழிற்சாலைகள், இந்திய இராணுவம் மற்றும் DRDO ஆகியவற்றின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.அண்மையில், இந்திய புவியியல் ஆய்வுமையத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இந்திய பாதுகாப்புப்படை எது?**

அ. இந்திய இராணுவம்

**ஆ. இந்திய கடற்படை ☑**

இ. இந்திய விமானப்படை

ஈ. இந்திய கடலோர காவல்படை

- இந்திய கடற்படைக்கும் இந்திய புவியியல் ஆய்வுமையத்திற்கும் (GSI) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் சமீபத்தில் கையெழுத்தானது. "வானிலை & பெருங்கடலியல் கடற்படை பயன்பாட்டிற்கான கடற்பரப்பு வண்டல் தரவு, தயாரிப்புகள் மற்றும் நிபுணத்துவத்தைப்பகிர்வது" குறித்ததாகும் இந்த ஒப்பந்தம். GSIஇன் கடல்சார் மற்றும் கடலோர கணக்கெடுப்புப்பிரிவு, நாட்டின் பிரத்யேக பொருளாதார மண்டலத்தை வரைபடமாக்கியுள்ளது.
- GSIஇன் கடல்சார் ஆய்வுக்கப்பல்களைப் பயன்படுத்தி சேகரிக்கப்பட்ட தரவுகளின் களஞ்சியம் இப்போது இந்திய கடற்படையால் பயன்படுத்தப்படும். இந்தத்தரவுகள், இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் நடத்தப்படும் கடல்சார் பயிற்சிகளின்போது கடல்சார் மாதிரியாக்கத்திற்கு பயன்படுத்தப்படும்.

**5.ஆண்டுதோறும் எந்த அமைச்சகம் / அமைப்பால் குழந்தைகளுக்கான தேசிய வீரதீரச்செயல்களுக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன?**

அ. பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டமைச்சகம்

ஆ. பாதுகாப்பு அமைச்சகம்

இ. UNICEF

ஈ. இந்திய குழந்தைகள் நல கவுன்சில் ☑

❖ 2019ஆம் ஆண்டிற்கான தேசிய வீரதீரச்செயல்களுக்கான விருதுகளை அண்மையில் புது தில்லியில் உள்ள இந்திய குழந்தைகள் நல கவுன்சில் (ICCW) வழங்கியது. தேசிய வீரதீரச்செயல்களுக்கான விருதுகளுக்கு 10 சிறுமிகள் உட்பட 22 குழந்தைகள் தேர்வுசெய்யப்பட்டனர். அதில் ஒரு விருது மட்டும், மறைவுக்குப்பின் வழங்கப்பட்டது.

❖ பேருந்து விபத்துக்குப்பின்னர், 40'க்கும் மேற்பட்ட உயிர்களைக் காப்பாற்றியதற்காக 15 வயது கேரள சிறுவன் ஆதித்யாவுக்கு 'பாரத் விருது' என்று அழைக்கப்படும் மிகவுயர்ந்த விருது வழங்கப்பட்டது. 1952இல் இந்திய குழந்தைகள் நல கவுன்சில் (Indian Council for Child Welfare) உருவாக்கப்பட்டது. இது குழந்தைகளின் துணிச்சலான மற்றும் தன்னிச்சையான தன்னலமற்ற சேவை அல்லது ஒரு சமூக குற்றத்திற்கு எதிரான அவர்களின் வீரதீரச்செயல்களை அங்கீகரிக்கும் நோக்கோடு இந்த விருதை நிறுவியது.

**6.ஓய்வுபெற்ற IAS அதிகாரியான யுத்வீர் சிங் மாலிக், அண்மையில், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட எந்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார்?**

அ. IL&FS

ஆ. DHFL

இ. Unitech ☑

ஈ. Altico Capital

❖ ஓய்வுபெற்ற IAS அதிகாரியான யுத்வீர் சிங் மாலிக், அண்மையில், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நிலவர உடைமை நிறுவனமான யுனிடெக்கின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டார். அவர் ஜன.21, 2020 அன்று பதவியேற்றார். சில நாட்களுக்கு முன்பு, யுனிடெக்கின் மொத்த நிர்வாகக் கட்டுப்பாட்டையும் கையகப்படுத்தி, புதிய இயக்குநர்களை நியமிக்குமாறு உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு அறிவுறுத்தியது. இந்நிறுவனம் மனை வாங்குவோரின் பணத்தை தனது சொந்தப்பயன்பாட்டு –க்கு பயன்படுத்துவதாகவும், மனை வழங்கலில் மோசடியை மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

**7.எந்தத் தனியார்துறை வங்கி, அண்மையில் தனது ATM'களிலிருந்து 'அட்டைப்பயன்பாடு இல்லாமல் பணம்பெறும்' வசதியை அறிமுகப்படுத்தியது?**

அ. HDFC வங்கி

ஆ. ஆக்சிஸ் வங்கி

இ. ICICI வங்கி ☑

ஈ. கோடக் மஹிந்திரா வங்கி

❖ இந்தியாவின் முன்னணி தனியார்துறை வங்கி அண்மையில் தனது ATM'களிலிருந்து 'அட்டைப் பயன்பாடு இல்லாமல் பணம்பெறும் – Cardless Cash Withdrawal' வசதியை அறிமுகப்படுத்தியது. கிட்டத்தட்ட 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அனைத்து ICICI வங்கி ATM'களிலும் இந்த வசதி கிடைக்கப் பெறும். இச்சேவையைப்பெறுவதற்கு, 'iMobile' என்னும் ICICI வங்கியின் செயலியில் வாடிக்கையாளர் உள்நுழைந்து, தற்காலிக 'PIN' எண்ணை உருவாக்க வேண்டும்.

- எந்தவொரு அட்டையும் எடுத்துச்செல்ல வேண்டிய அவசியமின்றி, பெறப்பட்ட ஒருமுறை மட்டுமே பயன்படக்கூடிய கடவுச்சொல் (OTP) மற்றும் 'PIN' எண்ணை உள்ளிட்டு வாடிக்கையாளர் பணத்தை எடுக்கவியலும். இதற்கான தினசரி பணப்பரிவர்த்தனை வரம்பு மற்றும் மொத்த வரம்பு ₹20,000 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.


**8.ஆலோசனைநிறுவனமான PwC, தலைமைச்செயல் அதிகாரிகளிடம் (CEO) மேற்கொண்ட அண்மைய கருத்துக்கணிப்பின்படி, எந்த நாடு அதிக வளர்ச்சி வாய்ப்புகளைக் கொண்டுள்ளது?**

அ. சீனா

ஆ. இந்தியா

**இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

ஈ. ஜெர்மனி



- முன்னணி சர்வதேச ஆலோசனை நிறுவனமான PwC, சமீபத்தில், உலகெங்கிலும் உள்ள தலைமைச் செயல் அதிகாரிகளிடம் (CEO) அது மேற்கொண்ட வருடாந்திர கருத்துக்கணிப்பிப்பின் முடிவுகளை வெளியிட்டது. உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் குறித்து, 83 நாடுகளைச் சேர்ந்த 1,580'க்கும் மேற்பட்ட தலைமைச் செயல் அதிகாரிகளிடம் இந்நிறுவனம் கருத்துக்கணிப்புசெய்தது.

- கருத்துக்கணிப்பின்படி, ஐக்கிய அமெரிக்க நாடுகளில் அதிக வளர்ச்சி வாய்ப்பு உள்ளதாக தலைமைச் செயல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீனா, இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியா நான்காவது இடத்தைப்பிடித்துள்ளது. அடுத்த 12 மாதங்களில் பன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சி குறையும் என்று உலகளாவிய தலைமைச் செயல் அதிகாரிகளில் 53% பேர் நம்புகிறார்கள் என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

**9.அண்மையில் உருவாக்கப்பட்ட, 'தேசிய துளிர்நிறுவன ஆலோசனைக்குழு'வுக்கு தலைமையேற்ற மத்திய அமைச்சர் யார்?**

அ. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் அமைச்சர்

ஆ. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர்

**இ. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் ☑**

ஈ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சர்

सत्यमेव जयते
Department of Commerce
Ministry of Commerce and Industry

- தேசிய துளிர்நிறுவன ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு சமீபத்தில் அறிவித்தது. இந்தக்குழு, இந்தியாவில், துளிர்நிறுவனங்களுக்கு வலுவான சூழலை உருவாக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசுக்கு ஆலோசனைகள் வழங்கும்.

- இதற்கு மத்திய வர்த்தக அமைச்சர் தலைமைதாங்குவார்; அதே நேரத்தில், மத்திய அரசால் பரிந்துரைக்–கப்படும் ஈராண்டு பதவிக்காலம் உடைய அலுவல்பூர்வமற்ற உறுப்பினர்களும் இதில் இருப்பார்கள். இணைச்செயலாளர் பதவிநிலைக்குக் குறையாத சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் & அமைப்புகளின் வேட்பாளர்கள் பதவி வழி உறுப்பினர்களாக இதில் இருப்பார்கள்.

**10.அண்மையில் எந்த ஆப்பிரிக்க நாட்டில், இந்தியாவின் முதல் மாநாட்டு மையம் திறக்கப்பட்டது?**



அ. லிபியா

ஆ. கானா

**இ. நைஜர் ☑**

ஈ. அல்ஜீரியா

- இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அண்மையில், ஆப்பிரிக்காவில் இந்தியாவின் முதல் மாநாட்டு மையத்தை திறந்துவைத்தார். இந்திய ஒன்றியத்தின் உதவியுடன் மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜரில், மகாத்மா காந்தி சர்வதேச மாநாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளது. இதனை நைஜர் அதிபர் மஹமடௌ இசௌபௌ கூட்டாக திறந்துவைத்தார்.

- மேற்கு ஆப்பிரிக்க நாட்டிற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஒருவர் பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாகும். கடந்த ஆண்டு நைஜரில் நடைபெற்ற ஆப்பிரிக்க ஒன்றிய உச்சிமாநாட்டை நடத்துவதற்கு ஆதரவாக, இந்தியா, நைஜருக்கு $15 மில்லியன் டாலர் மானியம் வழங்கியுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.ஹசன் டயப், எந்த நாட்டின் பிரதமர்?**



அ. இஸ்ரேல்

ஆ. ஜோர்டான்

**இ. லெபனான் ☑**

ஈ. சிரியா

❖ பல்வேறு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு இடையில் பிரதமர் ஹசன் டயப் தலைமையின்கீழ், லெபனான், ஒரு புதிய அரசாங்கத்தை அமைத்துள்ளது. முன்னாள் பிரதமர் சாத் அல் ஹரிரி, கடந்த 2019 அக்டோபர் மாதம் நடைபெற்ற ஊழல் மற்றும் தவறான நிர்வாகத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் அழுத்தத்தின்கீழ் தனது பதவியிலிருந்து விலகியபின்னர், அந்த நாடு ஒரு சிறந்த அரசாங்கமின்றி இருந்துவந்தது.

❖ லெபனானின் அதிபர் மைக்கேல் ஔன், புதிய பிரதமராக ஹசன் டயப்பை பரிந்துரைத்தார். ஹசன் டயப், பெய்ரூட்டின் அமெரிக்க பல்கலையில் பேராசிரியராக உள்ளார். அவர் இருபது உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவையின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**2.அந்நிய நேரடி முதலீட்டின் வரம்பை 100% ஆக உயர்த்துவதற்கு அண்மையில் தொலைத்தொடர்பு துறையிடமிருந்து ஒப்புதல் பெற்ற இந்திய தொலைத்தொடர்பு சேவை வழங்குநர் எது?**

அ. ஜியோ

**ஆ. பாரதி ஏர்டெல் ☑**

இ. வோடபோன் ஐடியா

ஈ. பி எஸ் என் எல்

❖ முந்தைய வரம்பான 49 சதவீதத்திலிருந்து செலுத்தப்பட்ட மூலதனத்தின் 100% வரை அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை (FDI) அதிகரிப்பதற்கான தொலைத்தொடர்பு துறையின் ஒப்புதலை அண்மையில் பாரதி ஏர்டெல் நிறுவனம் பெற்றது. அயல்நாட்டு முதலீட்டாளர்கள் பாரதி ஏர்டெல்லில் 74 சதவீதம் வரை முதலீடு செய்வதற்கான ரிசர்வ் வங்கியின் அனுமதியை அந்நிறுவனம் ஏற்கனவே பெற்றுள்ளது.

❖ வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து அதிக நிதியைப்பெறுவதற்கு பாரதி ஏர்டெல் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு இந்த ஒப்புதல் உதவும். பாரதி ஏர்டெல்லில் 35% பங்குகளை வைத்திருக்கும் சிங்கப்பூர் டெலிகம்யூனிகேஷன்ஸ் லிட் அல்லது சிங்டெல், பாரதி ஏர்டெல்லில் தனது பங்குகளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3.இந்தியாவின் சட்டம் & நீதி அமைச்சகத்தால் சமீபத்தில் வெளியிட்ட அறிவிப்பின்படி, 'பரஸ்பர பிரதேசம் – Reciprocating Territory' என அறிவிக்கப்பட்ட நாடு எது?**

**அ. ஐக்கிய அரபு அமீரகம் ☑** ஆ. ஓமன்

இ. சவுதி அரேபியா ஈ. ஏமன்

- சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், அண்மையில் ஓர் அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டது; இது, ஐக்கிய அரபு அமீரகத்தை 1908ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறை தொகுப்புச்சட்டம், பிரிவு 44Aஇன் கீழ், 'பரஸ்பர பிரதேசம்' என்று அறிவித்தது. இந்த அறிவிப்பில், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள நீதிமன்றங்களின் பட்டியலையும் அதேபிரிவின்கீழ், 'உயர்நீதிமன்றங்கள்' என அறிவித்தது.

- 'பரஸ்பர பிரதேசத்தில்' உள்ள அறிவிக்கப்பட்ட சில நீதிமன்றங்கள் அனுப்பிய ஆணைகள் இந்தியாவில் நிறைவேற்றப்படுவதைப்போல இந்தியாவால் அனுப்பப்படும் ஆணைகள் அங்கும் நிறைவேற்றப்படும். ஐக்கிய அரபு அமீரகத்தைத் (UAE) தவிர ஐக்கியப்பேரரசு (UK), சிங்கப்பூர், வங்கதேசம், மலேசியா மற்றும் நியூசிலாந்து ஆகியவையும் இதில் அடங்கும். இம்முடிவு, இருநாடுகளுக்கும் இடையிலான தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் கால அளவை குறைக்க உதவும் என நம்பப்படுகிறது.

**4. Carbon Disclosure Project (CDP) India'இன் ஆண்டறிக்கையில், இந்தியாவின் தரநிலை (rank) என்ன?**

அ. ரு (ஐந்து) ☑

ஆ. சு (ஆறு)

இ. எ (ஏழு)

ஈ. அ (எட்டு)

5

- Carbon Disclosure Project (CDP) India என்ற இலாப நோக்கற்ற சுற்றுச்சூழல் அமைப்பானது, 2018ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை "Corporates #StepUp Climate Action" என்ற தலைப்பில் வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, கடந்த 2018 டிசம்பருக்குள் பாரிஸ் ஒப்பந்தத்துக்கு இணங்க 25 நிறுவனங்கள் அறிவியல்–அடிப்படையிலான இலக்குகளுக்கு உறுதியளித்துள்ளன.

- பெருநிறுவன காலநிலை நடவடிக்கைகளில் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குப்பிறகு இந்தியா ஐந்தாவது இடத்தைப்பெற்றுள்ளது. இந்த அறிக்கை, நிறுவனங்களின் கரியமிலவாயு ($CO_2$) உமிழ்வு குறைப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்துள்ளது. மேலும், 2018–2019ஆம் ஆண்டுக்கு இடையில் கணக்கெடுக்கப்பட்ட 59 நிறுவனங்களுள் 58 இந்திய நிறுவனங்கள், கால நிலை தொடர்பான சிக்கல்கள் குறித்து மேற்பார்வைக்குழுவை வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

**5.அண்மையில், இந்தியாவின் எந்த நடிகைக்கு, உலகப் பொருளாதார மன்றத்தின் 'கிரிஸ்டல் விருது' வழங்கப்பட்டது?**

அ. பிரியங்கா சோப்ரா

ஆ. தீபிகா படுகோனே ☑

இ. கரீனா கபூர்

ஈ. அனுஷ்கா சர்மா



- பிரபல நடிகை தீபிகா படுகோனே, சுவிச்சர்லாந்தின் தாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டுக்கூட்டத்தின்போது கிரிஸ்டல் விருதைப்பெற்றார். மனநலத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரி –க்கும் விதமாக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

❖ உலகப் பொருளாதார மன்றத்தின் உலகக்கலை மன்றத்தின் தலைவரும், இணை நிறுவனருமான ஹில்டே ஸ்வாப், இந்த விருதை வழங்கினார். தீபிகா படுகோனே, 'Live Love Laugh' என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றை நடத்திவருகிறார். அது, இந்தியாவில் உள்ள பள்ளிகளில் விழிப்புணர்வு சார்ந்த நிகழ்ச்சிகளை நடத்துவதில் ஈடுபட்டு வருகிறது. இலவச மனநலச்சிகிச்சை மற்றும் மருத்துவக்கல்வி திட்டங்களுக்கும் அந்த அறக்கட்டளை நிதியளித்து வருகிறது.

**6.அண்மையில், 'முதலமைச்சர் கிருஷக் துர்கத்னா கல்யாண் யோஜனா' என்னும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**

அ. குஜராத்

**ஆ. உத்தரபிரதேசம் ☑**

இ. மகாராஷ்டிரா

ஈ. ஆந்திரபிரதேசம்



❖ உத்தரபிரதேச மாநில அரசானது சமீபத்தில், 'முதலமைச்சர் கிருஷக் துர்கத்னா கல்யாண் யோஜனா' என்னும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தத்திட்டத்தின்கீழ் விவசாயிகளின் குடும்பத்திற்கு அவர்களின் இறப்பு அல்லது வேலைசெய்யும்போது உடல் ஊனம் ஏற்பட்டால் ₹5 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும். 18–70 வயதுக்குட்பட்ட விவசாயிகள் இந்தத்திட்டத்தின்கீழ் வருவர்.

❖ இந்த நிதியுதவித்திட்டம் பிற நில உரிமையாளர்களின் வயல்களில் வேலை செய்பவர்களையும், அறுவடைக்குப்பிறகு பயிர்களைப்பெறுவோர்களையும் உள்ளடக்கும். உ.பி மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, 'முதலமைச்சர் பரியதன் சம்வர்தன் யோஜனா' என்றவொரு திட்டத்தைச் செயல்படுத்தவும் அம்மாநிலம் முடிவுசெய்துள்ளது.

**7.சமீபத்தில், இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) வெளியிட்ட எந்திரப்பெண்ணின் பெயரென்ன?**

அ. ககன் மித்ரா

**ஆ. வயோம் மித்ரா ☑**

இ. வாயு மித்ரா

ஈ. ஹியூமன் மித்ரா



❖ சமீபத்தில் பெங்களூருவில் நடந்த, "மனிதர்களின் விண்வெளிப்பயணம் மற்றும் ஆய்வு – தற்போதைய சவால்கள் மற்றும் எதிர்காலப்போக்குகள்" என்ற மாநாட்டின் தொடக்க அமர்வில் 'வயோம் மித்ரா – Vyom Mitra' எனப்படும் எந்திரப்பெண்ணை இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) வெளியிட்டது.

❖ பெண்பால் அம்சங்களைக்கொண்ட இந்த எந்திரப்பெண், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்தியாவின் முதல் விண்வெளித்திட்டத்திற்கு முன்னதாக விண்வெளிக்கு செலுத்தப்படும். சோதனை பயணத்தின்போது, விண்வெளியில் மனிதர்கள் ஆற்றக்கூடிய மனித செயல்பாடுகளை இந்த எந்திரப் பெண் உருவகப்படுத்தும். 2020 டிசம்பர் மற்றும் 2021 ஜூலையில் என இருமுறை இந்த எந்திரப் பெண்ணை விண்ணுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

**8.புதிதாக உருவாக்கப்பட்ட யூனியன் பிரதேசமான தாத்ரா&நாகர் ஹவேலி மற்றும் டாமன்&டையூவின் தலைநகரம் எது?**

அ. டாமன் ☑

ஆ. நாகர் ஹவேலி

இ. தாத்ரா

ஈ. சில்வாசா




- பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, அண்மையில், புதிதாக அமைக்கப்பட்ட தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஆகியவற்றின் தலைநகரமாக டாமன் நகரம் இருக்கும் என அறிவித்தது. டாமன் என்பது இந்தியாவின் மேலைக்கடற்கரையில் அமைந்துள்ள முந்தைய யூனியன் பிரதேசங்களான டாமன் & டையூவில் உள்ள ஒரு நகரமாகும்.

- இந்தியாவின் இருவேறு தனித்தனி யூனியன் பிரதேசங்களாக இருந்த டாமன் & டையூ மற்றும் தாத்ரா & நாகர் ஹவேலி ஆகியவை ஒரே யூனியன் பிரதேசமாக தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையூ என கடந்த 2019 டிச.3 அன்று இணைக்கப்பட்டன. முந்தைய யூனியன் பிரதேசங்களான தாத்ரா & நாகர் ஹவேலியின் முந்தைய தலைநகரமாக சில்வாசா இருந்தது.

**9.இந்தியாவின் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட் (IOCL) அண்மையில் எந்த நாட்டின் பெட்ரோலிய ஆணையத்திற்கு உதவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**



அ. கானா ☑

ஆ. அர்ஜென்டினா

இ. பிரேசில்

ஈ. பெரு

- இந்தியாவின் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிட் (IOCL) மற்றும் கானாவின் தேசிய பெட்ரோலிய ஆணையம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று அண்மையில் கையெழுத்தானது. கானாவின் திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு (LPG) வலையமைப்பை விரிவுபடுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கானாவின் தேசிய LPG ஊக்குவிப்பு கொள்கையை செயல்படுத்துவதற்காக இந்தியன் ஆயில் உதவியும் அதன் தொழினுட்ப நிபுணத்துவத்தையும் ஆப்பிரிக்க நாட்டின் பெட்ரோலிய அதிகாரிகளுடன் பகிர்ந்துகொள்ளும்.

- இந்த அறிவிப்பை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் வெளியிட்டுள்ளது. புதிய LPG மதிப்பு சங்கிலிக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்துறைகளில், கானா நாட்டுக்கு இந்தியன் ஆயில் லிட்., உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**10.மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் எஃகு அமைச்சர், எந்த இந்திய பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்காக, 'SERVICE' என்ற தன்னார்வத் திட்டத்தை சமீபத்தில் தொடங்கிவைத்தார்?**

அ. இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL)

**ஆ. இந்திய உருக்கு ஆணையம் (SAIL) ☑**

இ. தேசிய அனல்மின் நிறுவனம் (NTPC)

ஈ. பாரத மிகுமின் நிறுவனம் (BHEL)

❖ இந்திய பொதுத்துறை நிறுவனமான இந்திய உருக்கு ஆணையத்தின் (SAIL) பணியாளர்களுக்காக, 'SERVICE' என்ற தன்னார்வ திட்டத்தை, அண்மையில், மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் எஃகு அமைச்சர் அறிமுகப்படுத்தினார். SAIL Employees Rendering Volunteerism & Initiatives for Community Engagement (**SERVICE**) என அழைக்கப்படும் இந்தத் திட்டம் ஜனவரி 24ஆம் தேதியன்று வரும் SAIL நிறுவனத்தின் தொடக்கநாளிலிருந்து செயல்பாட்டுக்கு வரும்.

❖ இத்திட்டத்தின்கீழ், SAIL ஊழியர்கள் தாமாக முன்வந்து சமூக நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிக்கப் –படுகிறார்கள், கல்வி, நலவாழ்வு மற்றும் பெண்கள் மேம்பாடு ஆகியவற்றில் இது மிகுந்த கவனம் செலுத்துகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை' திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்குள் எங்குவேண்டுமானாலும் நியாய விலை உணவுப்பொருட்களை வாங்க அனுமதியளித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இவ்வசதி, முதற்கட்டமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் சோதனை முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்


**1.சர்வதேச கல்வி நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?**

அ. ஜனவரி 21

ஆ. ஜனவரி 24 ☑

இ. ஜனவரி 23

ஈ. ஜனவரி 26




- ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.24ஆம் தேதியை சர்வதேச கல்வி நாளாக UNESCO அனுசரிக்கிறது. வளர்ச்சி மற்றும் அமைதியில் கல்வியின் பங்கை இது கொண்டாடுகிறது. "Learning for People, Planet, Prosperity & Peace" என்பது நடப்பாண்டில் வரும் சர்வதேச கல்வி நாளுக்கான கருப்பொருளாகும்.
- கடந்த 2018 டிசம்பர் அன்று, ஐ.நா., பொது அவை ஜனவரி.24ஆம் தேதியை, 'சர்வதேச கல்விநாள்' என அறிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. கல்வி மற்றும் கற்றலை மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க வளமாகக் கருதும் இந்நாள், கல்வி ஓர் அடிப்படை உரிமை என்பதை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

**2.அண்மையில், பின்வரும் எந்த அமைப்புடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் கையெழுத்திட்டது?**

அ. உலக வங்கி

ஆ. பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ☑

BILL & MELINDA GATES foundation

இ. ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ. BRICS வங்கி

- பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை (BMGF) உடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. தீனதயால் அந்தியோதயா யோஜனா – தேசிய ஊரக வாழ்வாதாரத்திட்டத்தின்கீழ் (DAY–NRLM) இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளது.
- நலிவடைந்த கிராமப்புற நிறுவனங்களை அடிமட்டத்திலிருந்து வலுப்படுத்துவதே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கமாகும். DAY–NRLM மற்றும் BMGF ஆகியவை கிராமப்புற நிறுவனங்கள்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன்மூலம் வறியநிலை மக்கள் மற்றும் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்துகின்றன.
- கடந்த 2011 ஜூனில், மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் DAY–NRLM தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தில், எட்டு முதல் பத்தாண்டு காலப்பகுதியில் சுய–உதவிக்குழுக்கள் மற்றும் அதுபோன்ற பிற நிறுவனங்கள்மூலம் நாட்டில் உள்ள 7 கோடி கிராமப்புற மக்களை உள்ளடக்கும் திட்டமும் உள்ளது.

**3.நடப்பாண்டுக்கான (2020) சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கர் விருதுபெற்றவர் யார்?**

அ. விஜய் குமார்

ஆ. சைலேந்திர பாபு



**இ. குமார் முன்னன் சிங் ☑**

ஈ. நவீன் குமார்

- 'தனிநபர்' பிரிவின்கீழ், நடப்பாண்டுக்கான (2020) சுபாஷ் சந்திரபோஸ் ஆப்தா பிரபந்தன் புரஸ்கருக்கு குமார் முன்னன் சிங் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். 'நிறுவனம்' பிரிவின்கீழ், உத்தரகண்ட் மாநிலத்தின் பேரிடர் தணிப்பு மற்றும் மேலாண்மை மையம் இந்த விருதுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளது.
- 2005ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் நிறுவன உறுப்பினரா–வார் குமார் முன்னன் சிங். புதிதாக தேசிய பேரிடர் மீட்புப்படையை (NDRF) நிறுவியதற்காகவும் அவர் பாராட்டப்படுகிறார். பேரிடர் மேலாண்மைத்துறையில் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் மேற்கொண்ட பாராட்டத்தக்க பணிகளை அங்கீகரிப்பதற்காக இவ்விருது இந்தியஅரசால் வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் ஜன.23 அன்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் இந்த விருது அறிவிக்கப்படுகிறது.


**4.பள்ளிகளில் அரசியலமைப்பின் முகவுரையை வாசிக்கும் நடைமுறையை கட்டாயமாக்கியுள்ள மாநில அரசு எது?**

அ. உத்தரபிரதேசம்

**ஆ. மத்தியபிரதேசம் ☑**

இ. குஜராத்

ஈ. மகாராஷ்டிரா




- மத்திய பிரதேச மாநில கல்வித்துறை வெளியிட்டுள்ள உத்தரவின்படி, பள்ளிகளில் அரசியலமைப்பின் முகவுரையை வாசிக்கும் நடைமுறையை அம்மாநில அரசு கட்டாயமாக்கியுள்ளது. இவ்வுத்தரவின்படி, அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், சனிக்கிழமைதோறும், மாணவர்களுடன் சேர்ந்து இறைவணக்கத்திற்குப்பிறகு தலைமையாசிரியர் அல்லது ஆசிரியரால் அரசியலமைப்பு முகவுரை வாசிக்கப்படும்.
- பள்ளியில் இதுபோன்ற நடைமுறைகள் செயல்படுத்தப்படுவதன்மூலம் மாணாக்கரிடையே நமது அரசியலமைப்பின் மீதான ஆர்வம் தூண்டப்படும். 2020 ஜன.26 முதல் அனைத்து தொடக்க மற்றும் இடைநிலைப்பள்ளிகளிலும் அரசியலமைப்பின் முகவுரையைப்படிக்க மகாராஷ்டிரா மாநிலம் அரசும் ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் தீர்மானம், கடந்த 2013ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனால் இதுவரை செயல்படுத்தப்படவில்லை.

**5.ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பு பன்னாட்டுச் சுற்றுலாத்தல விருது–2019இல், "வளர்ந்து வரும் பன்னாட்டுச் சுற்றுலாத்தலம்" என்ற சிறப்பு கௌரவத்தைப் பெற்ற மாநில சுற்றுலாத்துறை எது?**

அ. உத்தரகண்ட்

ஆ. மணிப்பூர்

இ. அஸ்ஸாம்

**ஈ. கேரளா ☑**

- திருச்சூர் மாவட்டத்தில் கேரள மாநில சுற்றுலத்துறையால் செயல்படுத்தப்பட்ட தடையற்ற சுற்றுலா திட்டத்திற்கு, ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பு பன்னாட்டுச் சுற்றுலாத்தல விருது–2019இல், "வளர்ந்து வரும் பன்னாட்டுச் சுற்றுலாத்தலம்" என்ற சிறப்பு கௌரவம் கிடைத்துள்ளது.

- கேரள மாநிலத்தில் உள்ள 120 சுற்றுலாத்தலங்களை மாற்றுதிறனாளிகளும் அணுகும் வகையில் மாற்றியமைப்பதற்காக, தடையற்ற சுற்றுலா திட்டத்தை, கடந்த 2019 மார்ச் மாதத்தில் கேரள சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியது. இதுபோன்று எண்பது திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன; அவற்றுள் 8 திட்டங்கள் திருச்சூர் மாவட்டத்தில் உள்ளன. ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பின் வழிகாட்டுதல்களின் படி, சுற்றுலாத்தலங்களை மாற்றுதிறனாளிகளும் அணுகும் வகையில் மாற்றியமைத்த முதல் மாநிலம் கேரளாவாகும்,

**6.புத்தாக்கம், சமூக சேவை, விளையாட்டு, கலை & கலாசாரம் மற்றும் துணிச்சல் ஆகிய துறைகளில், இந்திய குடியரசுத்தலைவர் அண்மையில் குழந்தைகளுக்கு வழங்கிய விருதின் பெயர் என்ன?**



அ. ஜனனி புரஸ்கார்

ஆ. சக்தி புரஸ்கார்

**இ. பால சக்தி புரஸ்கார் ☑**

ஈ. பால புரஸ்கார்

- புத்தாக்கம், சமூக சேவை, கல்விசார் நடவடிக்கைகள், விளையாட்டு, கலை மற்றும் கலாசாரம் மற்றும் துணிச்சல் ஆகிய துறைகளில் சாதித்த குழந்தைகளுக்கு பால சக்தி புரஸ்கார் விருது வழங்கப்படுகிறது. இந்திய குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், அண்மையில், 5 முதல் 18 வயதுக்குட்பட்ட 49 குழந்தைகளுக்கு இவ்விருதுகளை வழங்கினார்.

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் நிறுவப்பட்ட பிரதம மந்திரி ராஷ்டிரிய பால புரஸ்கார் விருது, 2 பிரிவுகளின்கீழ் வழங்கப்படுகிறது. 'பாலசக்தி புரஸ்கார்' சிறப்பான குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. 'பாலகல்யாண் புரஸ்கார்' குழந்தைகள் நலனுக்காக பங்களித்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

**7.ரிசர்வ் வங்கியின் சமீபத்திய வழிகாட்டுதல்களுக்குப்பிறகு, அரசு மற்றும் பெருநிறுவன பத்திரங்களைப் பொறுத்தவரை அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கான தற்போதைய முதலீட்டு வரம்பு என்ன?**




அ. 20%

ஆ. 25%

**இ. 30% ☑**

ஈ. 35%

- அரசு மற்றும் பெருநிறுவன பத்திரங்களில் அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு வரம்பை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) உயர்த்தியுள்ளது. இதனால் நாட்டில் அயல்நாட்டு முதலீடுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. முந்தைய விதிகளின்படி, ஒரு வெளிநாட்டு முதலீட்டாளரின் குறுகியகால முதலீடுகள் 20 சதவீதத்தைத் தாண்டக்கூடாது. இந்த விதி பெருநிறுவன பத்திரங்களுக்கும் பொருந்தும்.

❖ இந்நிலையில் தற்போது அது 20 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக மாற்றப்பட்டுள்ளது. இதேபோல் கடன் முதலீடும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கான கடன் – பரிமாற்ற நிதி வர்த்தகத்துக்கும் அனுமதியளிக்கிறது.

**8.தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வுத் தளத்தை உருவாக்கவுள்ள அமைப்பு எது?**

அ. புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்

**ஆ. NITI ஆயோக் ☑**

இ. நிதி ஆணையம்

ஈ. தேசிய மேம்பாட்டுக் கவுன்சில்

❖ இந்தியாவின் மதியுரையகமான NITI ஆயோக், தேசிய தரவு மற்றும் பகுப்பாய்வு தளத்தை (National Data & Analytics Platform) உருவாக்கவுள்ளது. அண்மையில், NITI ஆயோக் துணைத்தலைவர், இதற்கான விழைவு ஆவணத்தை வெளியிட்டார். இந்தத் தளத்தின்மூலம் அனைத்து அரசாங்க தரவுகளையும் பயனர்–நட்பு முறையில் அணுகவியலும். இந்தத் தளத்தில் பல்வேறு அரசாங்க வலைத்தளங்களின் அண்மைய தரவுகள் இடம்பெற்றிருக்கும்.

❖ இது, தரவுப் பகுப்பாய்வு & பல்வேறு வகையான காட்சிப்படுத்துதலுக்கான கருவிகளையும் வழங்கும். NDAPஇன் முதல் பதிப்பு, எதிர்வரும் 2021ஆம் ஆண்டில் வெளியிடப்படும். தளத்தின் மேம்பாடு மற்றும் நிர்வாகத்திற்காக அத்துறைசார்ந்த நிபுணர்களுடன்கூடிய தொழில்நுட்ப ஆலோசனைக்குழு ஒன்றும் (Technical Advisory Group – TAG) அமைக்கப்படவுள்ளது.

**9.நோய்ப்பரவலைத் தடுப்பதற்காக, தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசியை, இந்தியா, எந்த நாட்டிற்கு வழங்கியுள்ளது?**

அ. இலங்கை

**ஆ. மாலத்தீவு ☑**

இ. வங்கதேசம்

ஈ. நேபாளம்




❖ தீவு நாடான மாலத்தீவில் தட்டம்மை நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அந்நாட்டுக்கு முப்பது ஆயிரம் தட்டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசிகளை இந்தியா வழங்கியது. தட்டம்மை நோயை மாலத்தீவு முற்றாக ஒழித்திருந்தாலும், இந்நோய் பாதிப்பைக்கண்டறிந்த பின்னர் மாலத்தீவு அரசாங்கம் இந்நோய் பரவுவததாக சந்தேகித்தது.

❖ கோரிக்கையின் மூன்று நாட்களுக்குள் ஒப்படைக்கப்பட்ட தடுப்பூசிகளுக்கு நாடு இந்தியாவுக்கு அவசர கோரிக்கை விடுத்தது. தடுப்பூசி பெறுவதற்காக, இந்தியாவிடம் அந்நாடு அவசர கோரிக்கை விடுத்தது. கோரிக்கை கிடைக்கப்பெற்ற 3 நாட்களுக்குள் அந்நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. தடுப்பூசிகளுக்காக டென்மார்க் மற்றும் UNICEF ஆகியவற்றிடமும் மாலத்தீவு அணுகியிருந்தது. கடந்த ஒருவாரத்தில் மாடும் மாலத்தீவைச்சேர்ந்த 4 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

**10.பெரும் யூதப்படுகொலையை நினைவுகூருவதற்கும் யூதப்பகையுணர்வை எதிர்ப்பதற்குமாக உலக இனப்படுகொலை மன்றம் (World Holocaust Forum), அண்மையில் எந்த நகரத்தில் கூட்டப்பட்டது?**

அ. மாஸ்கோ

**ஆ. ஜெருசலம் ☑**

இ. பாரிஸ்

ஈ. பெர்லின்

❖ சமீபத்தில், இஸ்ரேலின் தலைநகரான ஜெருசலமில், உலக இனப்படுகொலை மன்றம் கூட்டப்பட்டது. ஆஷ்விட்ஸ் வதை முகாமிலிருந்து விடுதலையடைந்த 75ஆவது ஆண்டு நிறைவையும் இந்த மன்றம் குறித்தது. இந்த மன்றத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட உலகளாவிய தலைவர்கள் கலந்துகொண்டனர். இதில், இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், அமெரிக்க துணைத்தலைவர் மைக் பென்ஸ், பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் தலைவர்கள் மற்றும் வேல்ஸ் இளவரசர் ஆகியோர் அடங்குவர்.

❖ உலக இனப்படுகொலை மன்றத்தின் அறக்கட்டளையால் இந்த மன்றம் ஏற்பாடு செய்யப்பட்டது. இது, இனப்படுகொலையின் நினைவைக் காப்பதற்கும், அனைத்து மதங்களுக்கும் தேசிய இனங்களுக்கும் இடையில் சகிப்புத்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## பத்ம விருதுகள் - 2020

- தமிழ்நாட்டைச் சேர்ந்த TVS மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான வேணு சீனிவாசனின் சிறந்த தொழில் மற்றும் வர்த்தகச் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் விதமாக, நடுவணரசு அவருக்கு உயரிய விருதான, 'பத்மபூஷண்' விருது அறிவித்துள்ளது.

- சிறந்த சமூகசேவையை அளித்துவரும் கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதனுக்கும், 'பத்மபூஷண்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

- கலைத்துறையில் சிறந்துவிளங்கும் கர்நாடக இசைப்பாடகர்களான லலிதா மற்றும் சரோஜா சிதம்பரம்; மதுரை, சென்னை ஆகிய பெருநகரங்களின் வரலாற்று, சமூக & கலாசார அடையாளங்–களின் ஓவியங்களை சிறப்புற தீட்டும் மனோகர் தேவதாஸ், சமூக சேவகர் S. இராமகிருஷ்ணன், நாதஸ்வர இசையால் அனைவரின் உள்ளங்களை கவர்ந்துவரும் காலீ ஷாபி மெகபூப் மற்றும் ஷேக் மெகபூப் சுபானி ஆகியோருக்கு 'பத்மஸ்ரீ விருது'கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

- அதுபோல், அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் சிறப்பாக பணியாற்றிவரும் சென்னை IIT பேராசிரியர் பிரதீப் தலப்பில்லுக்கும், 'பத்மஸ்ரீ விருது' அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்தியாவுக்கும் எந்த நாட்டுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக கங்கா – வோல்கா உரையாடலின் முதல் பதிப்பு, அண்மையில், புது தில்லியில் நடைபெற்றது?**

அ. சீனா

**ஆ. இரஷ்யா ☑**

இ. நேபாளம்

ஈ. வங்கதேசம்



❖ கங்கா–வோல்கா உரையாடலின் தொடக்கப்பதிப்பு அண்மையில் புது தில்லியில் நடைபெற்றது. இது குறித்த எண்ணம், கடந்த 2018 அக்டோபரில் நடைபெற்ற, இரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான இந்தியா – இரஷ்யா உச்சிமாநாட்டின்போது உருவானது. இந்த உரையாடலை, Dr. சியாமா பிரசாத் முகர்ஜி ஆய்வு அறக்கட்டளையுடன் இணைந்து இந்தியாவின் மத்திய வெளியுறவு அமைச்சகம் ஏற்பாடுசெய்திருந்தது.

❖ இந்நிகழ்வில் இந்தியா மற்றும் இரஷ்யாவைச் சேர்ந்த பல அறிஞர்கள் பங்கேற்று, இந்தியா – இரஷ்யா இருதரப்பு ஒத்துழைப்பின் பின்னணியில், கலாசாரம் மற்றும் நாகரிகத்தில் முக்கிய கவனஞ்செலுத்தி கலந்துரையாடினர்.

**2. STEMஇல் பெண்கள் குறித்த பன்னாட்டு உச்சிமாநாடு – "Visualizing the Future: New Skylines – எதிர்காலத்தை காட்சிப்படுத்துதல்: புதிய எல்லைகள்", அண்மையில் எந்த நகரத்தில் நடைபெற்றது?**

அ. மும்பை

**ஆ. புது தில்லி ☑**

இ. ஹைதராபாத்

ஈ. கொல்கத்தா

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உள்ள உயிரி–தொழில்நுட்பத்துறை, STEMஇல் (அறிவியல் (S), தொழில்நுட்பம் (T), பொறியியல் (E) மற்றும் கணிதம் (M)) பெண்கள் குறித்த பன்னாட்டு உச்சிமாநாட்டை, "Visualizing the Future: New Skylines" புது தில்லியில் உள்ள இந்தியா வாழ்விட மையத்தில் ஏற்பாடுசெய்தது.

❖ STEM துறையில் பெண்கள் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காகவும், இந்தத்துறையில் அவர்களின் தொழிற்முறை வாழ்வை வளர்த்தெடுப்பதற்காகவும் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறு நாடுகளைச்சேர்ந்த புகழ்பெற்ற பெண் அறிவியலாளர்கள், STEM துறையில் தங்கள் தொழிற்முறை வாழ்வைத் தொடர்ந்தவர்கள், பங்கேற்பாளர்களிடையே உரையாற்றி அவர்களின் அறிவியல் தொழிற் முறை வாழ்வைத் தொடர ஊக்குவித்தனர்.

**3.நாடு முழுவதும் கொண்டாடப்பட்ட தேசிய வாக்காளர் நாளின் கருப்பொருள் என்ன?**

அ. Electoral Literacy for Stronger Democracy ☑

ஆ. Voting Rights for All

இ. Ethical Voting

ஈ. Sab Se Pehle Voting




❖ தேசிய வாக்காளர் நாள், ஜன.25 அன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது, இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில் 2011 ஜனவரி 25 அன்று முதன்முதலில் கொண்டாடப்பட்டது. 1950 ஜன.25 அன்று இந்திய தேர்தல் ஆணையம் நிறுவப்பட்டது. இந்த ஆண்டின் (2020) வாக்காளர் நாள், பத்தாம் ஆண்டு கொண்டாட்டத்தையும் இந்திய தேர்தல் ஆணையத்தின் 70ஆவது ஆண்டையும் குறிக்கிறது.

❖ "வலுவான ஜனநாயகத்திற்கு தேர்தல் குறித்த அறிவு" என்பது நடப்பாண்டில் வரும் தேசிய வாக்காளர் நாளுக்கான கருப்பொருளாகும். புது தில்லியில் நடந்த கொண்டாட்டத்தின் முதன்மை விருந்தினராக இந்தியக்குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் கலந்துகொண்டார்.

**4.எம்மாநிலத்தின் வேளாண் வணிகம் மற்றும் ஊரக உருமாற்றத் திட்டத்திற்காக உலக வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது?**

அ. குஜராத்

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. மத்தியபிரதேசம்

ஈ. ஹரியானா

❖ இந்திய அரசு, மகாராஷ்டிர மாநில அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை மகாராஷ்டிர மாநிலத்தின் வேளாண் வணிகம் மற்றும் ஊரக உருமாற்றத் திட்டத்திற்காக $210 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு சந்தை அணுகலை அதிகரிக்கவும், மதிப்புச்சங்கிலிகளில் பங்கேற்கவும் இந்நிதி உதவும்.

❖ விவசாயத்தில் காலநிலை நெகிழ்திறன்மிக்க உற்பத்தி தொழில்நுட்பங்களை பின்பற்ற விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்தத் திட்டம், மகாராஷ்டிரா மாநிலத்தின் முப்பத்தாறு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். கிட்டத்தட்ட பத்து இலட்சம் விவசாய குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.எந்த இந்திய தனியார்துறை வங்கி, அண்மையில் தனது, 'முன்னோடி வங்கியியல் – Pioneer Banking' என்றழைக்கப்படும் செல்வ மேலாண்மை தளத்தை அறிமுகப்படுத்தியது?**

அ. ICICI வங்கி

ஆ. HDFC வங்கி

இ. ஆக்சிஸ் வங்கி

ஈ. இன்டஸ்இன்ட் வங்கி ☑

- ❖ முன்னணி தனியார்துறை வங்கியான இன்டஸ்இன்ட் வங்கி தனது உயர்–நிகர மதிப்புள்ள வாடிக்–கையாளர்களின் வங்கி தேவைகளுக்கு சேவைபுரிவதற்காக, 'முன்னோடி வங்கி – Pioneer Bank' என்ற செல்வ மேலாண்மை தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட செல்வ மேலாண்மைக்கான இந்தப் புதிய சேவை, வங்கியால் தனது வாடிக்கையாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் தனிப்பட்ட மற்றும் வணிக வங்கியியல் தயாரிப்புகளின் பிற தொகுப்புகளுடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ இப்புதியசேவை, முக்கியமாக அதிக நிகர–மதிப்புள்ள தனிநபர் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டுள்ளது. மேலும், வாடிக்கையாளரின் இல்லங்களுக்கேச்சென்று நாளொன்றுக்கு ₹4 இலட்சம் வரையிலான இலவச வங்கியியல் சேவை அளிப்பதும் இதிலடங்கும். மேலும், அர்ப்பணிப்புடன் கூடிய செல்வ மேலாளர்கள் மற்றும் முதலீட்டு வல்லுநர்களின் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளும் இதில் வழங்கப்படுகிறது.

**6. WEFஇன் 'Lighthouse Network'இல் சேர்க்கப்பட்டதற்காக, சமீபத்தில் நடந்த WEF ஆண்டுக்கூட்டத்தில், விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இந்திய எஃகு ஆலை எது?**

அ. சேலம் எஃகு ஆலை

**ஆ. டாடா எஃகு ஆலை, கலிங்கநகர் ☑**

இ. விஜயநகர் எஃகு ஆலை

ஈ. விசாகப்பட்டினம் எஃகு ஆலை

- ❖ WEFஇன் 'Lighthouse Network'இல் சேர்க்கப்பட்டதற்காக, சமீபத்தில் நடந்த WEF ஆண்டுக்கூட்டத்தில் டாடா எஃகு ஆலை, கலிங்கநகர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கடந்த 2019 ஜூலையில், உலக பொருளாதார மன்றத்தின் பெருமைமிகு, 'Lighthouse Network'இல் சேர்க்கப்பட்ட முதல் மற்றும் ஒரே இந்திய உற்பத்தி ஆலையாக டாடா எஃகு ஆலை, கலிங்கநகர் ஆனது.

- ❖ உலகெங்கிலும் உள்ள பிற பத்து ஆலைகளும் இந்த வலையமைப்பில் சேர்க்கப்பட்டன. நெதர்லாந்தில் அமைந்துள்ள டாடா எஃகின் IJmuiden ஆலை, ஏற்கனவே இவ்வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

**7.சமீபத்தில், டிஜிட்டல் நாணய நிர்வாகத்திற்கான உலகளாவிய கூட்டமைப்பை அறிவித்த அமைப்பு எது?**

அ. உலக வங்கி

**ஆ. உலகப் பொருளாதார மன்றம் ☑**

இ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஈ. உலக வர்த்தக அமைப்பு

- ❖ டிஜிட்டல் நாணயங்களை நிர்வகிப்பதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதில் கவனஞ்செலுத்திய முதல் உலகளாவிய கூட்டமைப்பாக உலகப்பொருளாதார மன்றம் ஆனது. சுவிச்சர்லாந்தில் உள்ள தாவோஸில் நடைபெற்ற WEFஇன் ஐம்பதாவது ஆண்டுக்கூட்டத்தின் கடைசி நாளில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த முயற்சி நிதி நிறுவனங்கள், அரசாங்க பிரதிநிதிகள் மற்றும் இந்தத் துறையில் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான ஓர் உலகளாவிய தளத்தை உருவாக்கும்.

- உள்ளடக்கிய கொள்கைகள் மூலம் நிதியமைப்புக்கான அணுகலை அதிகரிக்கும் நோக்கத்துடன் இக்கூட்டமைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. கிரிப்டோகரன்சிகள் மற்றும் நிலையான நாணயங்கள் உள்ளிட்ட டிஜிட்டல் நாணயங்களின் நிர்வாகத்திலும் கவனம் செலுத்தப்படும்.

**8.குடியரசு நாள் கொண்டாட்டங்களில் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வதற்காக இந்தியா வந்த ஜெய்ர் மெசியாஸ் போல்சனாரோ, எந்த நாட்டின் அதிபராவார்?**

அ. அர்ஜென்டினா

**ஆ. பிரேசில் ☑**

இ. பிரான்ஸ்

ஈ. ஜெர்மனி




- பிரேசில் குடியரசுத்தலைவர் ஜெய்ர் மெசியாஸ் போல்சனாரோ, அண்மையில் தனது அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னணி தொழிலதிபர்களுடன் இந்தியாவுக்கு வருகைதந்து இந்திய குடியரசு நாள் கொண்டாட்டங்களில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

- எண்ணெய் மற்றும் எரிவாயு, சுரங்கம் மற்றும் இணைய பாதுகாப்பு போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் பிரேசில் இடையே பதினைந்து ஒப்பந்தங்கள் கையெழுத்தடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- சமூகப்பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தங்கள், குற்றவியல் விஷயங்களில் பரஸ்பர சட்ட–உதவி, உயிரி – ஆற்றலில் ஒத்துழைப்பு உள்ளிட்ட ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2018 அக்டோபர் மாதத்தில், பிரேசிலின் அதிபரானார் போல்சனாரோ. இது, இந்தியாவுக்கு அவர் மேற்கொள்ளும் முதல் பயணமாகும்.

**9.சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா, அண்மையில் எந்தத் தெற்காசிய நாட்டில், 'Under the World' என்ற கருப்பொருளுடன் தொடங்கியது?**

அ. இலங்கை

**ஆ. வங்கதேசம் ☑**

இ. நேபாளம்

ஈ. இந்தியா

- சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா, அண்மையில் வங்கதேசத்தின் தலைநகரமான டாக்காவில், 'Under the World' என்ற கருப்பொருளின்கீழ் தொடங்கியது. வங்கதேசத்தின் மிகப்பெரிய திரைப்பட விழாக்களுள் ஒன்றெனக் கருதப்படும் இது, கடந்த 2008ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் மற்றும் பதின்ம பருவத்தினருக்காக பிரத்தியேகமாகக் கொண்டாடப்படும் ஒரே சர்வதேச விழாவாகும்.

- இந்த விழாவை வங்கதேசத்தின் குழந்தைகள் திரைப்பட சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. 39 நாடுகளைச் சேர்ந்த 173 படங்கள் இதில் திரையிடப்படவுள்ளன. 7 நாள் நீடிக்கும் இந்தத்திருவிழா, ஜனவரி 31ஆம் தேதி நிறைவடையவுள்ளது.

❖ 'வங்கதேசத்தின் தந்தை' என்றழைக்கப்படும் ஷேக் முஜிபுர் ரகுமானின் நூறாவது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், 'கோகா ஜொகோன் சோட்டோ சிலீன்' திரைப்படம் திரையிடப்பட்டது.

**10.ஆசுகஞ்ச்–அகவுரா சாலையை 4 வழிச்சாலையாக மேம்படுத்துவதற்காக, எந்த நாட்டோடு இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது?**

அ. மியான்மர்

**ஆ. வங்கதேசம் ☑**

இ. இலங்கை

ஈ. நேபாளம்




❖ ஆசுகஞ்ச் ஆற்றுத்துறைமுகத்திற்கும் வங்கதேசத்தின் அகவுராவுக்கும் இடையிலான 50.58 கி.மீ நீளச் சாலையை 4 வழிச்சாலையாக மேம்படுத்துவதற்காக, இந்தியா, சமீபத்தில், வங்கதேசத்துடன் ஒப்பந்தம் செய்தது. இது, கடந்த 2016ஆம் ஆண்டில், இந்தியா, வங்கதேசத்துக்கு வழங்கிய $2 பில்லியன் டாலர் கடன்தொகையின் ஒருபகுதியில் நிறைவேற்றப்படுகிறது.

❖ 50.58 கிலோமீட்டரில் 39 கி.மீ நீளச் சாலையை வங்கதேசத்தின் சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையும் (RHD) ஆப்கான்ஸ் உட்கட்டமைப்பு என்ற இந்திய நிறுவனமும் இணைந்து மேம்படுத்தும் . சாலையின் மீதமுள்ள பகுதியை மேம்படுத்தும் பணியை, RHD மற்றும் இந்தியா – வங்கதேசத்தின் கூட்டுநிறுவனம் மேற்கொள்ளும். இத்திட்டம் இருநாடுகளுக்கும் இடையிலான சாலை இணைப்பை மேம்படுத்துவதோடு தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இடையிலான பிராந்திய இணைப்பையும் எளிதாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## தமிழ்நாடு அரசின் குடியரசு நாள் சிறப்பு விருதுகள் - 2020

❖ கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்தியதில் மெச்சத்தக்க வகையில் பணியாற்றிய காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் பதக்கங்கள் வழங்கப்பட்டன. இவற்றை, திருப்பூர் மது விலக்கு காவல் ஆய்வாளர் சந்திரமோகன், திருச்சி மத்திய புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளர் இராஜசேகரன், பண்ருட்டி காவல் ஆய்வாளர் பூங்கோதை, விழுப்புரம் மத்திய புலனாய்வு காவல் உதவி ஆய்வாளர் அழகிரி, கும்பகோணம் மேற்குக் காவல் நிலைய தலைமைக்காவலர் பார்த்திபநாதன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

❖ சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சர் விருது – கோயம்புத்தூர் நகர காவல் நிலையம். இரண்டாவது பரிசு திண்டுக்கல் காவல் நிலையம், மூன்றாவது பரிசு தருமபுரி காவல் நிலையம்.

❖ அதிக உற்பத்தித்திறன்பெறும் விவசாயிகளுக்கான வேளாண்மை துறை சிறப்பு விருது – ஈரோடு மாவட்டம் சென்னிமலை குன்னாங்காட்டுவலசையைச் சேர்ந்த யுவக்குமாருக்கு வழங்கப்பட்டது.

- இதேபோன்று ஆழ்துளை கிணற்றில் விழுந்த குழந்தையை சாமர்த்தியமாக மீட்ட நாகை தீயணைப்பு வண்டி ஓட்டுநர் ராஜாவுக்கு வீரதீர செயலுக்கான 'அண்ணா பதக்கம்' வழங்கப்பட்டது. பொதுமக்கள் பிரிவில் ஏகேஷ், பிரிஸ்டன் பிராங்களின், வினித் சார்லிபன், ஈஸ்டர் பிரேம்குமார், தனலட்சுமி, வினோதினி, இந்திராகாந்தி மற்றும் பழனியப்பனுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்கப்பட்டது.

- கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது – திருச்சியைச் சேர்ந்த ஷாஜ் முகமதுவுக்கு வழங்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்தப்படும் அமைதி பேச்சுவார்த்தைகளில் பொதுமக்களிடையே மத நல்லுணர்வை ஏற்படுத்தியமைக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு அரசு துறைகள் சார்பாக அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடைபெற்றது. இதில் 16 அரசுத் துறைகள் பங்கேற்றன. அந்தந்தத்துறையின் திட்டங்களை விளக்கும் வகையில் ஊர்திகள் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. சிறப்பாக வடிவமைப்பு செய்யப்பட்டிருந்த காவல்துறையின் ஊர்திக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. அதில், குற்றங்களுக்கு முக்கிய துப்புகளை வழங்கும் CCTV பேரளவில் தயாரிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டது.

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில், பெருமைமிகு, 'பத்ம விபூஷன்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட புகழ்பெற்ற இந்திய விளையாட்டு வீரர் / வீராங்கனை யார்?**



அ. சச்சின் டெண்டுல்கர்

ஆ. தன்ராஜ் பிள்ளை

**இ. M C மேரி கோம் ☑**

ஈ. அபினவ் பிந்த்ரா

❖ ஆறு முறை உலக சாம்பியனும் ஒலிம்பிய குத்துச்சண்டை வீராங்கனையுமான MC மேரி கோமுக்கு நடப்பாண்டு (2020) குடியரசு நாளன்று மதிப்புமிக்க, 'பத்ம விபூஷன்' விருது வழங்கப்பட்டது. 'இந்திய மாமணி'க்குப் பிறகு இந்தியாவின் 2ஆவது மிகவுயர்ந்த குடிமக்கள் விருதான இந்த, 'பத்ம விபூஷன்' விருது, நடப்பாண்டில் மொத்தம் ஏழு பிரபலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

❖ முன்னாள் மத்திய அமைச்சர்கள் அருண் ஜெட்லி, சுஸ்மா சுவராஜ் மற்றும் ஜார்ஜ் பெர்னாண்டஸ் (மறைவுக்குப்பின்), உத்தரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பாடகர் சன்னுலால் மிஸ்ரா மற்றும் முன்னாள் மொரீஷியஸ் பிரதமர் அனிரூத் குக்நாத் ஆகியோர் இவ்விருதினை பெற்ற பிற நபர்களாவர்.

**2. 2020 குடியரசு நாளன்று, 'பத்ம பூஷன்' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை?**

அ. கச (14)

ஆ. கரு (15)

**இ. கசூ (16) ☑**

ஈ. கஎ (17)

16

❖ 'பத்ம பூஷண்' விருதுக்கு 16 பிரபலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தம் 141 'பத்ம' விருது பெற்றவர்களுள், ஏழு 'பத்ம விபூஷன்', 16 'பத்ம பூஷன்' மற்றும் 118 'பத்மஸ்ரீ' விருது பெற்றவர்கள் இருந்தனர். 'பத்ம பூஷன்' விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபலங்களுள் பூப்பந்து வீராங்கனை P V சிந்து, கோவாவின் முன்னாள் முதலமைச்சர் மனோகர் பாரிக்கர் (மறைவுக்குப்பின்), இந்தியாவின் நவீன சட்டக்கல்வியின் தந்தை N R மாதவ மேனன் மற்றும் தொழிலதிபர்கள் ஆனந்த் மஹிந்திரா மற்றும் வேணு சீனிவாசன் ஆகியோர் அடங்குவர்.

**3. நடப்பாண்டின் (2020) 'தேசிய சுற்றுலா மாநாடு' நடைபெற்ற இந்திய நகரம் எது?**




அ. வாரணாசி

**ஆ. கோனார்க் ☑**

இ. சிம்லா

ஈ. லே

❖ 'தேசிய சுற்றுலா மாநாடு', அண்மையில், ஒடிசாவின் கோனார்க் நகரத்தில் நடத்தப்பட்டது. இந்த 2 நாள் மாநாட்டை, ஒடிசா மாநில அரசும் இந்திய வர்த்தகம் & தொழிற்துறை கூட்டமைப்பும் (FICCI) இணைந்து நடத்தியுள்ளன. மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் இந்த மாநாட்டில் பங்கேற்று, ஓராண்டில், நாட்டில் உள்ள 15 சுற்றுலாத்தலங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் பயணச் செலவுகளுக்கு சுற்றுலா அமைச்சகம் நிதியளிக்கும் என அறிவித்தார்.

❖ இத்தகைய சுற்றுலாப்பயணிகள் தங்கள் சொந்த மாநிலங்களுக்கு வெளியே பயணஞ்செய்து அந்தப் பயண புகைப்படங்களை அமைச்சகத்தின் இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சுற்றுலாத் தலங் –களை பிரபலப்படுத்தும் நோக்கில், ஒடிசா மற்றும் குஜராத்துக்கு இடையே ஒரு நோக்க ஆவணமும் (MoI) அப்போது கையெழுத்தானது.

**4.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மார்க் ருட்டே, எந்த நாட்டின் பிரதமராவார்?**

அ. ஜெர்மனி

**ஆ. நெதர்லாந்து ☑**

இ. பிரான்ஸ்

ஈ. இத்தாலி



❖ இரண்டாம் உலகப்போரின்போது யூதர்களைத் துன்புறுத்தியதற்காக நாட்டின் முதல் மன்னிப்பைக் கோரியதை அடுத்து, நெதர்லாந்தின் பிரதமர் மார்க் ருட்டே அண்மைச் செய்திகளில் காணப்பட்டார்.

❖ ஆஷ்விட்ஸில் உள்ள நாஜி வதை முகாம் விடுதலையின் 75ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு, ஆம்ஸ்டர்டாமில் நடந்த வருடாந்திர இனப்படுகொலை நினைவேந்தலில், இவ்விஷயத்தில், இதுவரை எந்தவொரு அரசாங்கமும் முன்வைக்காத வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் மன்னிப்பை அவர் கோரினார். நெதர்லாந்தில் வாழ்ந்த 1.4 மில்லியன் யூதர்களுள் 1.1 மில்லியனுக்கும் அதிகமான யூதர்கள் ஆஷ்விட்ஸ் வதை முகாமில், இரண்டாம் உலகப்போரின்போது கொல்லப்பட்டனர்.

**5.இந்தியாவின் ஆற்றலைக்கொண்டாடும், 'பாரத் பார்வ் – 2020' வருடாந்திர நிகழ்வை நடத்தும் நகரம் எது?**

அ. மும்பை

**ஆ. புது தில்லி ☑**

இ. அகமதாபாத்

ஈ. ஜெய்ப்பூர்



❖ 'பாரத் பார்வ் – 2020' வருடாந்திர நிகழ்வானது 2020 ஜனவரி 26 முதல் 31 வரை புது தில்லியில் கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வதற்கு இந்தியர்களை ஊக்குவிப்பதும், 'உங்கள் நாட்டைக் காணுங்கள்' மனப்பான்மையுடன் அவர்களை ஊக்குவிப்பதும் இவ்விழாவின் நோக்கமாகும். நடப்பாண்டு (2020) விழாவின் கருப்பொருள், 'ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்' & 'மகாத்மா காந்தியின் 150 ஆண்டுகளைக் கொண்டாடுவது' என அமைக்கப்பட்டுள்ளது.

❖ புது தில்லியில் செங்கோட்டைக்கு முன்னுள்ள கியான் பாதை மற்றும் செங்கோட்டை மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த 6 நாள் நிகழ்வில், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆயுதப்படைகளின் கலாசார நிகழ்ச்சிகள் உட்பட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறும்.

**6.தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து இராஜ் நிறுவனம் (NIRDPR), சமீபத்தில், எந்த உலகளாவிய அமைப்புடன் இணைந்து, 'தகவல்தொடர்பு வள அலகு – Communication Resource Unit' என்றவொன்றை நிறுவியது?**

அ. உலக வங்கி

ஆ. UNICEF ☑

இ. UNESCO

ஈ. பன்னாட்டுச் செலவாணி நிதியம்

❖ மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழுள்ள தன்னாட்சி அமைப்பான தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து இராஜ் நிறுவனம் (NIRDPR), அண்மையில், UNICEF (ஐ.நா., சிறுவர் நிதியம்) உடன் இணைந்து 'தகவல்தொடர்பு வள அலகு' ஒன்றை நிறுவியது. போஷான் அபியான், தேசிய சுகாதார இயக்கம் மற்றும் தூய்மை இந்திய இயக்கம் உள்ளிட்ட முன்னணி தேசிய திட்டங்களுக்கு தகவல் தொடர்பு ஆதரவை வழங்குவதற்கான ஒரு பொறிமுறையாக இந்த அலகு செயல்படும்.

❖ தகவல்தொடர்பு வள அலகு தற்போது ஆந்திரபிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களில் செயல்பட்டு வருகிறது. இது, பல்வேறு அரசாங்க துறைகளுக்கு திறன்மேம்பாடு மற்றும் ஆலோசனை உள்ளிட்ட தகவல்தொடர்பு ஆதரவை அளித்துவருகிறது.

**7.நூற்றுக்கும் மேற்பட்ட இனங்கள்கொண்ட, இந்தியாவின் முதலாவதும் மிகப்பெரியதுமான நடையுலா மேற்கொண்டு காணக்கூடிய, 'பறவைக்கூடம்', அண்மையில் எந்த நகரத்தில் திறக்கப்பட்டுள்ளது?**

அ. மும்பை ☑

ஆ. கௌகாத்தி

இ. பெங்களூரு

ஈ. திருவனந்தபுரம்



❖ மகாராஷ்டிர மாநிலத்தின் முதலமைச்சர் உத்தவ் தாக்கரே, நாட்டின் முதலாவதும் மிகப்பெரியதுமான நடையுலா மேற்கொண்டு காணக்கூடிய, 'பறவைக்கூட'த்தை மும்பையில் உள்ள வீரமாதா ஜீஜாபாய் போசாலே பூங்கா மற்றும் மிருகக்காட்சிச்சாலையில் (பொதுவாக பைகுல்லா மிருகக்காட்சிச்சாலை) திறந்துவைத்தார். 18,200 ச.அடிக்கும் அதிகமான பரப்பளவில் இந்தப் பறவைக்கூடம் அமைந்துள்ளது.

❖ இது, நூற்றுக்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான அயல்நாட்டு மற்றும் உள்நாட்டுப் பறவைகளின் இயற்கை சூழல் நிறைந்த இருப்பிடமாக இருக்கும். இந்தப் பறவைக்கூடம் வழியாக ஒரு சிறிய பாலம் செல்கிறது; அது, பொதுமக்கள் நடந்து செல்லவும் பறவைகளை பார்க்கவும் பயன்படும்.

**8.ஒரு நபரின் உயிரைக்காப்பாற்றுவதில் மனித இயல்புக்கான சிறப்பான செயலுக்காக ஒரு நபருக்கு வழங்கப்படும் தேசிய விருதின் பெயர் என்ன?**



**அ. ஜீவன் ரக்ஷா பதக்கம் ☑**

ஆ. ரக்ஷா புரஸ்கார்

இ. ஜீவன் சக்தி பதக்கம்

ஈ. பாரத் ஜீவன் பதக்கம்

- ❖ 2019ஆம் ஆண்டுக்கான ஜீவன் ரக்ஷா பதக்க வரிசையில் வழங்கப்படும் விருதுகளை 54 பேருக்கு வழங்குவதற்கு குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்துள்ளார். இதில் ஏழு பேருக்கு சர்வோட்டம் ஜீவன் ரக்ஷா பதக்கம், 8 பேருக்கு உத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கம், 39 பேருக்கு ஜீவன் ரக்ஷா பதக்கம் ஆகியவை வழங்குவதும் அடங்கும். இதில் 5 விருதுகள், விருதாளர்களின் மறைவுக்குப்பின் வழங்கப்படும் விருதுகளாக உள்ளன.
- ❖ அசோக சக்ரா வரிசையில் வீரதீரச்செயல்களுக்காக வழங்கப்படும் ஜீவன் ரக்ஷா பதக்கங்கள், கடந்த 1961ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. விபத்துகள், மின்விபத்து, இயற்கைப்பேரிடர்கள் அல்லது மீட்புப்பணி போன்ற சம்பவங்களில் ஒருவரின் உயிரைக்காப்பாற்றுவதில் சிறப்பாக செயல்படுவோருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

**9.ஏழைகளுக்கு மானிய விலையில் உணவுவழங்குவதை நோக்கமாகக்கொண்ட, 'சிவ போஜன்' திட்டம் அண்மையில் எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டது?**



அ. உத்தரபிரதேசம்

ஆ. பீகார்

**இ. மகாராஷ்டிரா ☑**

ஈ. கர்நாடகா

- ❖ மகாராஷ்டிரா மாநில அரசு, ஏழைகளுக்கு ₹10'க்கு உணவு வழங்குவதை நோக்கமாகக்கொண்ட, 'சிவ போஜன்' திட்டத்தை அறிமுகப்படுத்தியது. 71ஆவது குடியரசு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்கீழ், அனைத்து மாவட்டங்களிலும் இதற்கென நியமிக்கப்பட்ட மையங்களில், பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.
- ❖ ஏறக்குறைய 50, 'சிவ போஜன்' விற்பனை நிலையங்கள் சோதனை அடிப்படையில் அமைக்கப்பட்டு உள்ளன. கூடிய விரைவில் மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் இவை விரிவுபடுத்தப்படும்.

**10.அண்மையில் காலமான ஷெர் சிங் குக்கல் (Sher Singh Kukkal), எந்தத் துறைசார்ந்தவராக இருந்தார்?**



அ. அரசியல்

ஆ. விளையாட்டு

**இ. கலை ☑**

ஈ. வணிகம்

❖ 86 வயதான மூத்த கலைஞரும் சிற்பியுமான ஷெர் சிங் குக்கல், அண்மையில், புது தில்லியில் வயது மூப்பின் காரணமாக காலமானார். படம் வரைதல், ஓவியந்தீட்டல், சிற்பம், அச்சிடுதல் மற்றும் புகைப்படம் எடுத்தல் உள்ளிட்ட நுண்கலைகளின் பல கிளைகளில் சிறந்த அனுபவமுள்ள ஷெர் சிங் குக்கல், ஒரு குறிப்பிடத்தக்க கலைஞராக இருந்தார். சைனிக் பள்ளியிலும் அவர் கலைகளைக் கற்பித்துள்ளார்.

❖ 2008–09ஆம் ஆண்டில், மத்திய கலாசார அமைச்சகத்தால் ராஜீவ் காந்தி அறக்கட்டளை விருது மற்றும் காட்சிக்கலை புகைப்படமெடுத்தலில் சீனியர் பெல்லோஷிப் உள்ளிட்ட பல தேசிய மற்றும் சர்வதேச விருதுகளையும் அவர் வென்றுள்ளார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்திய அரசும் அஸ்ஸாம் மாநில அரசும், அண்மையில், எந்தப் பழங்குடி குழுவுடனான முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன?**




அ. போடோ ☑

ஆ. குக்கி

இ. ஆதி

ஈ. நிஷி

❖ இந்திய அரசாங்கமும் அஸ்ஸாம் மாநில அரசும், அண்மையில், போடோலாந்தின் தேசிய ஜனநாயக முன்னணியுடனான (NDFB) முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. போடோ பழங்குடியினர் குழு, அஸ்ஸாமிலிருந்து போடோலாந்தைப் பிரித்து தனிமாநிலமாக அறிவிக்கக்கோரி வந்தது. கிளர்ச்சியை வழிநடத்திய அனைத்து போடோ மாணவர் சங்கமும் (ABSU) ஒருங்கிணைந்த போடோ மக்கள் அமைப்பு என்ற மற்றொரு குழுவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

❖ போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணியின் 1500'க்கும் மேற்பட்ட போராளிகள் ஆயுதங்களுடன் சரணடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்காக ₹1500 கோடி ரூபாயை அரசு வழங்கியுள்ளது.

**2.அண்மையில், மேலவையை கலைப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றிய மாநிலம் எது?**

அ. தெலுங்கானா

ஆ. மகாராஷ்டிரா

இ. ஆந்திரபிரதேசம் ☑

ஈ. கர்நாடகா

❖ அண்மையில் மேலவையை கலைப்பதற்கான தீர்மானத்தை ஆந்திர மாநிலத்தின் சட்டப்பேரவை நிறைவேற்றியது. இந்த முடிவை ஆளும் YSR காங்கிரஸ் கட்சியின் 133 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரித்தனர். ஆந்திர மாநில சட்டப்பேரவையின் மேலவையில், எதிர்க்கட்சியான தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பால், YSR காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய சில முக்கிய மசோதாக்களை மேலவையில் நிறைவேற்ற முடியாமல் போனது. இதையடுத்து, மேலவையை ஒட்டுமொத்தமாக கலைத்துவிட ஆளும் YSR காங்கிரஸ் அரசு முடிவு செய்துள்ளது.

❖ சந்திரபாபு நாயுடு தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான தெலுங்கு தேசம் கட்சிக்கு, மேலவையில் 58 இடங்களுள் 27 இடங்கள் உள்ளன. இது அண்மையில், ஆந்திரத்தின் தலைநகர் பரவலாக்கம் தொடர்பான 2 மசோதாக்களை கீழவையில் நிறைவேற்றியபின்னர், அதுகுறித்து மேலும் விவாதிக்க குழுவொன்றை அனுப்பியது.

**3.ஏர் இந்தியாவிலிருந்து அரசாங்கத்தின் எத்தனை சதவீத முதலீடுகள் திரும்பப்பெறப்படவுள்ளன?**

அ. 50%

ஆ. 60%

இ. 75%

ஈ. 100% ☑



- ₹60,000 கோடிக்கும் அதிகமாக பெருங்கடனில் சிக்கித்தவிக்கும் ஏர் இந்தியா விமான நிறுவனத்தின் 100% பங்குகளையும் விற்க மத்திய அரசு முடிவு செய்து அறிவிப்பு செய்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் 2ஆவது முறையாக ஏர் இந்தியாவை விற்பனை செய்ய அறிவிப்பு வெளியிடுகிறது மத்திய அரசு. கடந்த 2018ஆம் ஆண்டில் ஏர் இந்தியா நிறுவனத்தின் 76% பங்குகளை விற்பனை செய்து நிர்வாகத்தைத் தனியாருக்கு மாற்ற மத்திய அரசு அறிவிப்புசெய்தது.

- ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஆகியவற்றின் 100% பங்குகளையும், AI–SATS கூட்டு நிறுவனத்தில் உள்ள 50% பங்குகளையும் விற்பனை செய்யப்படவுள்ளது. ஆர்வமுள்ள நிறுவனங்கள், தகுதிவாய்ந்த தனிமனிதர்கள் வரும் மார்ச் 17ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்றும் தகுதியான நிறுவனங்கள் பட்டியல் மார்ச் 31ஆம் தேதி வெளியிடப்படும் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள நிறுவனங்களின் நிகர மதிப்பு முந்தைய வரம்பான ₹5000 கோடியிலிருந்து ₹3500 கோடியாக குறைக்கப்படுகிறது.


**4.மூன்றாவது உலக உருளைக்கிழங்கு மாநாடு – 2020ஐ நடத்தவுள்ள இந்திய நகரம் எது?**

அ. மும்பை

ஆ. அகமதாபாத்

இ. காந்திநகர் ☑

ஈ. சூரத்



- குஜராத் மாநிலம் காந்திநகரில் மூன்றாவது உலக உருளைக்கிழங்கு மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சிமூலம் தொடங்கிவைத்தார். முந்தைய இரண்டு உலக உருளைக்கிழங்கு மாநாடுகள், கடந்த 1999 மற்றும் 2008ஆம் ஆண்டில் நடைபெற்றது.

- புது தில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கவுன்சில் மற்றும் இந்தக்கவுன்சிலுக்கு உட்பட்ட சிம்லாவில் உள்ள மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி மையம் மற்றும் பெரு நாட்டின் லிமாவில் உள்ள சர்வதேச உருளைக்கிழங்கு மையம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்திய உருளைக்கிழங்கு சங்கத்தால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாநாடு, உருளைக்கிழங்கு ஆராய்ச்சியின் சாதனைகளை வெளிக்கொணரும் மற்றும் இந்தப் பத்தாண்டுக்கான வரைபடத்தையும் உருவாக்கும்.

**5.நீரில்மூழ்கி மறைந்திருந்து தாக்கும் INS கவராட்டி என்னும் போர்க்கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கவுள்ள இந்திய கப்பல் கட்டுநர் யார்?**




அ. மசகன் கப்பல் கூடம்

ஆ. கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனம்

இ. ஹிந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனம்

ஈ. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் ☑

❖ கொல்கத்தாவில் உள்ள பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனமான கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள், நீரில்மூழ்கி மறைந்திருந்து தாக்கும் INS கவராட்டி என்னும் போர்க்கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கவுள்ளதாக அண்மைய அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'Project P28'இன்கீழ் இந்திய கடற்படைக்காக கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்களால் கட்டப்பட்ட நான்கு நீரில்மூழ்கி மறைந்திருந்து தாக்கும் போர்க்கப்பல்களில் கவராட்டி கடைசியாக உள்ளது.

❖ இலட்சத்தீவில் உள்ள தீவுகளின் பெயரிடப்பட்ட 'கமோர்டா', 'கடமத்' மற்றும் 'கில்தான்' ஆகிய மூன்றும் இதற்கு முன்னர் 2014–2017 வரையிலான காலகட்டத்தில் வழங்கப்பட்டது. இந்தப் புதிய INS கவராட்டி போர்க்கப்பல், 90% உள்நாட்டுக் கூறுகள்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்து சோதனைகளும் நிறைவடைந்துள்ள நிலையில், மாத இறுதிக்குள் இந்தக்கப்பல் வழங்கப்படவுள்ளது.

**6.அண்மையில், ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் உருவம் பொறிக்கப்பட்ட உலகின் மிகச்சிறிய தங்கநாணயத்தை வெளியிட்ட நாடு எது?**

அ. அமெரிக்கா

ஆ. சுவிச்சர்லாந்து ☑




இ. ஜெர்மனி

ஈ. பிரான்ஸ்

❖ அண்மையில் உலகின் மிகச்சிறிய தங்கநாணயத்தை சுவிச்சர்லாந்து அச்சிட்டுள்ளது. இதில், பிரபல அறிவியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் படம் பொறிக்கப்பட்டுள்ளது. உலகின் மிகச்சிறிய இந்த நாணயம் 2.96 மி.மீ விட்டத்துடனும் 0.063 கிராம் எடையுடனும் உள்ளதாக சுவிஸ் நாணயச்சாலை கூறியுள்ளது. இந்நாணயத்தின் மதிப்பு, 1/4 சுவிஸ் பிராங்குகள் அல்லது தோராயமாக ₹18.50 ஆகும்.

❖ ஐன்ஸ்டீன் தனது பதினேழாம் வயதில் சுவிச்சர்லாந்துக்கு வருகைதந்து அங்கு தனது கல்வியை நிறைவுசெய்தார். 1902ஆம் ஆண்டில் சுவிச்சர்லாந்து நாட்டின் குடிமகனாகவும் அவர் ஆனார். சுவிஸ் டென்னிஸ் நட்சத்திரமான ரோஜர் பெடரரின் படம் பொறித்த மற்றொரு நாணயமும் அச்சிடப்பட்டுள்ளது.

**7.பதவி விலகியதையடுத்து அண்மைச்செய்திகளில் காணப்பட்ட மர்ஜான் சாரக், எந்த நாட்டின் பிரதமராக இருந்தார்?**

அ. சுலோவேனியா ☑



ஆ. சுலோவாக்கியா

இ. செர்பியா

ஈ. குரோஷியா

❖ சுலோவேனியாவின் பிரதமர் மர்ஜன் சாரக் பதவி விலகியுள்ளார். கடந்த 2018ஆம் ஆண்டில் பிற கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்து பிரதமராக மர்ஜான் சாரக் பதவியேற்றார். எனினும், கடந்த நவம்பரில் எதிர்க்கட்சியான இடதுசாரி கூட்டணிக்கு வழங்கிய ஆதரவை திரும்பப்பெற்றது.

❖ இதனால் நாடாளுமன்றத்தில் மசோதாக்களைக் கொண்டுவருவதில் சிக்கல் அதிகரித்தது. அவரின் சிறுபான்மை அரசாங்கத்தில் நிதியமைச்சராக இருந்தவர் ஆண்ட்ரேஜ் பெர்டன்செல்ஜும், கூட்டணி கட்சிகளின் பூசலை அடுத்து அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக அண்மையில் அறிவித்தார்.

**8.இந்திய வங்கிகள் சங்கத்தின் (IBA) தலைமை நிர்வாகியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



அ. ரஜ்னிஷ் குமார்

ஆ. V G கண்ணன்

**இ. சுனில் மேத்தா ☑**

ஈ. ராகேஷ் சர்மா

❖ இந்திய வங்கியின் சங்கத்தின் அண்மைய அறிவிப்பின்படி, பஞ்சாப் தேசிய வங்கியின் முன்னாள் மேலாண்மை இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான சுனில் மேத்தா, IBAஇன் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்றுள்ளார். சுனில் மேத்தா, அண்மையில், பஞ்சாப் தேசிய வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

❖ இவர் இதற்கு முன்னர் இந்திய வங்கிகள் சங்கத்தின் தலைவர் பதவியை வகித்துள்ளார். அவருக்கு பதிலாக பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) தலைவர் ரஜ்னிஷ் குமார், 2019 அக்டோபரில் மாற்றப்பட்டார். தற்போது, கடந்த 2019 டிசம்பர் 31 அன்று பதவியேற்ற V G கண்ணனுக்கு பதிலாக சுனில் மேத்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

**9.எந்த இந்திய நாடகக் கலைஞருக்கு மதிப்புமிக்க பிரெஞ்சு கௌரவமான, 'Knight of the Order of Arts மற்றும் Letters' வழங்கப்படவுள்ளது?**



அ. நசீருதீன் ஷா

**ஆ. சஞ்சனா கபூர் ☑**

இ. கிரிஷ் கர்னாட்

ஈ. லில்லெட் துபே

❖ மூத்த நாடகக்கலைஞரும் ஹிந்தி நடிகர் சஷி கபூரின் மகளுமான சஞ்சனா கபூருக்கு, மதிப்புமிக்க பிரெஞ்சு கௌரவமான, 'Knight of the Order of Arts மற்றும் Letters' வழங்கப்படவுள்ளது. நாடகக் கலைகளுக்கு அவராற்றிய சிறந்த பங்களிப்புக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. தற்போது அலுவல்பூர்வ வருகையாக இந்தியாவுக்கு வருகைபுரிந்துள்ள பிரான்சின் கலாசார அமைச்சர் பிராங்க் ரைஸ்டர், இதற்கென திட்டமிடப்பட்ட விழாவில், சஞ்சனா கபூருக்கு, இந்த மதிப்புமிக்க விருதை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**10.பிட்ஸ்பர்க் ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில் இரண்டாமிடம் பிடித்த இந்திய ஸ்குவாஷ் வீரர் யார்?**



அ. ஜோஷ்னா சின்னப்பா

ஆ. தீபிகா பல்லிக்கல்

**இ. சௌரவ் கோசல் ☑**

ஈ. சுனைனா குருவில்லா

- பிட்ஸ்பர்க் ஓப்பன் ஸ்குவாஷ் இறுதிப்போட்டியில், எகிப்திய வீரர் ஃபாரெஸ் டெசௌகியிடம் தோற்று, இந்திய ஸ்குவாஷ் வீரர் சௌரவ் கோசல் இரண்டாமிடம் பெற்றார். 1 மணி 13 நிமிடங்கள் நீடித்த அரை இறுதி ஆட்டத்தில் எகிப்தின் உமர் மொசாட்டை வீழ்த்தி, இறுதிப்போட்டிக்கு முன்னேறிய பின்னர், சௌரவ் கோசல் 7–11, 4–11, 9–11 என்ற கணக்கில் எகிப்திய வீரரிடம் தோற்றார்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த விலங்கை நமீபியாவிலிருந்து இந்திய வாழ்விடத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு அண்மையில் இந்திய உச்சநீதிமன்றம் அனுமதித்தது?**



அ. ஆப்பிரிக்க யானை

ஆ. ஆப்பிரிக்க சிங்கம்

**இ. ஆப்பிரிக்க சிறுத்தை ☑**

ஈ. ஆப்பிரிக்க காண்டாமிருகம்

❖ ஆப்பிரிக்க சிறுத்தைகளை இந்தியாவுக்குக்கொண்டுவருவதற்கு உச்சநீதிமன்றம் அனுமதியளித்தது. இந்தியாவில் சிறுத்தைகள் கிட்டதட்ட அழியும் நிலையிலிருப்பதால், ஆப்பிரிக்க நாடான நமீபியாவில் இருந்து சிறுத்தைகளை இந்தியாவுக்குக்கொண்டுவர அனுமதி வழங்குமாறு தேசிய சிறுத்தைகள் பாதுகாப்பு அமைப்பு உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது. இம்மனுவை விசாரித்த இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி SA போப்டே தலைமையிலான அமர்வு இதற்கு அனுமதி வழங்கியது.

❖ இந்தத் திட்டம் தொடர்பாக தேசிய சிறுத்தைகள் பாதுகாப்பு அமைப்புக்கு உரிய ஆலோசனைகளை வழங்குவதற்காக மூன்று பேர்கொண்ட நிபுணர்கள் குழுவையும் உச்சநீதிமன்றம் அமைத்துள்ளது. இந்தக்குழுவில், இந்திய வனவிலங்குகள் அமைப்பின் முன்னாள் இயக்குநர், இந்திய வனவிலங்குகள் அமைப்பின் தலைமை இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் DIG ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

**2.இந்தியாவில் உள்ள எத்தனை ஈரநிலங்கள், சமீபத்தில், 'ராம்சார் தளம்' பட்டியலில் சேர்க்கப்பட்டன?**

அ. 8

**ஆ. 10 ☑**

இ. 12

ஈ. 14

❖ மேலும் பத்து இந்திய ஈரநிலங்கள் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக ராம்சாரால் அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் சமீபத்தில் அறிவித்தார். இதன்மூலம், ராம்சார் தள குறியீடுகொண்ட ஈரநிலங்களின் எண்ணிக்கை தற்போது மொத்தம் 37 ஆக உயர்ந்துள்ளது. 37 ராம்சார் தளங்களால் உள்ளடக்கப்பட்ட மொத்த பரப்பளவானது ஒரு மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.

❖ இப்புதிய அறிவிப்பில், நந்தூர் மாதமேஷ்வரின்மூலம் தனது முதல் ராம்சார் தள குறியீட்டை மகாராஷ்டிர மாநிலம் பெறுகிறது. பஞ்சாப் மேலும் 3 தளங்களைச்சேர்த்து, மொத்தம் 6 தளங்களைக்கொண்டுள்ளது, உத்தரபிரதேசம் 6 புதிய தளங்களைச் சேர்த்து, மொத்தம் 7 ராம்சார் தளங்களைக்கொண்டுள்ளது. ராம்சார் மாநாட்டில், உறுப்புநாடுகள் தங்கள் ஈரநிலங்களின் சூழல் முக்கியத்துவத்தை பாதுகாக்கும் நோக்கோடு கையெழுத்திட்டன.

**3. 2020 குடியரசு நாள் அணிவகுப்புக்கான சிறந்த அலங்கார ஊர்தி விருதை வென்ற மாநிலம் எது?**

அ. ஒடிசா

ஆ. உத்தரப்பிரதேசம்

இ. குஜராத்

**ஈ. அஸ்ஸாம் ☑**




- "தனித்துவமான கைவினைத்திறன் மற்றும் கலாசாரத்தின் நிலம்" என்ற கருப்பொருளைக்கொண்ட அஸ்ஸாம் மாநிலத்தின் அலங்கார ஊர்தி, '2020ஆம் ஆண்டு குடியரசு நாள் அணிவகுப்புக்கான சிறந்த அலங்கார ஊர்திக்கான விருதை' வென்றது. ஒடிசா மற்றும் உத்தரபிரதேச மாநிலத்தின் அலங்கார ஊர்திகள் கூட்டாக இரண்டாவது இடத்திற்கு தேர்வுசெய்யப்பட்டன.

- பகவான் லிங்கராஜாவின் புகழ்பெற்ற ருகுண ரத யாத்திரையை ஒடிசா மாநிலம் காட்சிப்படுத்தியது. கலாசார மற்றும் மதஞ்சார் சுற்றுலாவை 'சர்வ தர்ம சம பாவ்' என்ற கருப்பொருளுடன் உத்தரபிரதேசம் மாநிலம் காட்சிப்படுத்தியது. தேசிய பேரிடர் நிவாரணப் படையின் அலங்கார ஊர்தி மற்றும் 'ஜல் ஜீவன் திட்ட'த்தை சித்தரித்த ஜல் சக்தி திட்டம் சிறப்புப்பரிசைப் பெற்றது.

**4.அண்மையில் அமெரிக்காவுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ. ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா

ஆ. ஜெய் சங்கர்

**இ. தரஞ்சித் சிங் சந்து ☑**

ஈ. விஜய் கோகலே



- மூத்த தூதர் தரஞ்சித் சிங் சந்து, அண்மையில், அமெரிக்காவுக்கான அடுத்த இந்திய தூதராக நியமிக்கப்பட்டார். அவர் அமெரிக்காவுக்கான முந்தைய இந்திய தூதராக இருந்த ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவுக்கு பதிலாக நியமிக்கப்படுகிறார். 1988ஆம் ஆண்டைய இந்திய வெளியுறவு சேவை (IFS) அதிகாரியான தரஞ்சித், தற்போது, இலங்கையில் இந்திய உயராணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- முன்னதாக, வாஷிங்டன் DCஇல் உள்ள இந்திய தூதரகத்தில், துணைத்தலைவராக 2013 முதல் 2017 வரை 4 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். 2009 & 2011'க்கு இடையில் வெளியுறவு அமைச்சகத்தில் இணைச்செயலாளராகவும் (ஐ.நா அவை) பணியாற்றியுள்ளார்.

**5.அண்மையில் தொடங்கப்பட்ட புவன் பஞ்சாயத்து வலைத்தளத்தின் புதிய பதிப்பு 3.0, எந்த அமைப்பின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது?**

**அ. இந்திய விண்வெளி ஆய்வுமையம் ☑**

ஆ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு

இ. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்

ஈ. பாரத் மின்னணு லிட்

- இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) உருவாக்கிய செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் உதவியுடன் செயல்படும் புவன் பஞ்சாயத்து வலைத்தளத்தின் 3.0 பதிப்பை மத்திய வெளியுறவு அமைச்சர் ஜிதேந்திர சிங் அண்மையில் வெளியிட்டார்.

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் கிராமப் பஞ்சாயத்துகளை வளர்த்தெடுப்பதற்கான செயல்முறைக்கு உதவுவதற்கு புவி–இடஞ்சார்ந்த (geo–spatial) சேவைகளை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த உயர்–தெளிவுத்திறன்கொண்ட செயற்கைக்கோள் தரவு சிறந்த காட்சிப்படுத்துதலை வழங்கும் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல் & கண்காணிப்புக்கும் இது உதவும்.

**6.எந்த ஹிந்திச்சொல்லை, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் பதிப்பகம், '2019ஆம் ஆண்டுக்கான ஆக்ஸ்போர்டு ஹிந்திச்சொல்' எனத் தேர்வுசெய்துள்ளது?**

அ. சம்ரிதி

**ஆ. சம்விதான் ☑**

இ. சம்பிரதி

ஈ. சம்மான்




- கடந்த ஆண்டின் (2019), ஆக்ஸ்போர்டு ஹிந்திச்சொல்லாக, 'சம்விதான்' தேர்வுசெய்யப்பட்டுள்ளது என, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம் அறிவித்துள்ளது. ஹிந்தியில், 'சம்விதான்' என்றால், அரசியல் சாசனம் என்று பொருள். இச்சொல், 2019இல் அதிகமானோரை ஈர்த்துள்ளது. அரசியல் சாசனம் என்பது, மக்களாட்சி, மதச்சார்பின்மை, நீதி, விடுதலை, சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கியது. 'அடிப்படை கொள்கைகளின் முதுகெலும்பு' எனவும், 'சம்விதான்' சொல்லுக்குப் பொருள்கூறலாம்.

**7.சீனியர் தேசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்ற இந்திய வீரர் யார்?**

அ. சௌரவ் கோத்தாரி

**ஆ. பங்கஜ் அத்வானி ☑**

இ. துவாஜ் ஹரியா

ஈ. கீத் சேத்தி



- உலகத்தரம் வாய்ந்த இந்திய வீரரும், 23 முறை உலக சாம்பியனுமான பங்கஜ் அத்வானி, சமீபத்தில், சீனியர் தேசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பில் பட்டத்தை வென்றதன்மூலம் தனது 33ஆவது தேசிய பட்டத்தை வென்றார். புனேவில் நடைபெற்ற போட்டியில், பங்கஜ் தனது சகநாட்டு வீரரான சௌரவ் கோத்தாரியை 5–2 என்ற கோல் கணக்கில் இறுதிப்போட்டியில் வீழ்த்தினார். முன்னதாக நடைபெற்ற அரையிறுதியில், குஜராத்தின் துவாஜ் ஹரியாவை 5–0 என்ற கோல் கணக்கில் பங்கஜ் வீழ்த்தினார்.

- இது பங்கஜ் அத்வானியின் 33ஆவது தேசிய பட்டம் மட்டுமல்ல, இது அவரது 10ஆவது சீனியர் பட்டமும் கூட. பிப்.3 முதல் அதே இடத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள தேசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பிலும் பங்கஜ் அத்வானி பங்கேற்பார்.

**8.அண்மையில் எந்த நகரத்தில், மாற்றுத்திறனாளிகள் மேம்பாடு அடைவதற்கான கூட்டு பிராந்திய மையத்தை மத்திய சமூக நீதி அமைச்சர் திறந்துவைத்தார்?**

அ. ஹைதராபாத்

**ஆ. போர்ட் பிளேர் ☑**

இ. சென்னை

ஈ. கொச்சி




- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் தாவர் சந்த் கெலாட், அண்மையில், அந்தமான் மற்றும் நிக்கோபாரில் அமைக்கப்பட்ட போர்ட் பிளேர் நகரத்தில் கூட்டு பிராந்திய மையத்தை திறந்து வைத்தார். அங்குள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் மேம்பாடு, மறுவாழ்வு & வளர்ச்சி ஆகியவற்றை வழங்குவதை இம்மையம் கொண்டுள்ளது.

- மாற்றுத்திறனாளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளங்களை உருவாக்குவதற்காக சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் இந்த மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில், போபால், பாட்னா, கௌகாத்தி மற்றும் அகமதாபாத் உள்ளிட்ட பல நகரங்களில் இம்மையம் உள்ளது.

**9.எந்த மாநிலத்தில், 'சர்தார் வல்லபாய் படேல் அதிகாரமளித்தல் மற்றும் வாழ்வாதார மையம்' எனப் பெயரிடப்பட்டுள்ள பழங்குடியினருக்கு பயிற்சியளிப்பதற்கான திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்பட உள்ளது?**

அ. உத்தரபிரதேசம்

**ஆ. குஜராத் ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. சத்தீஸ்கர்




- குஜராத் மாநிலத்தின் கெவாடியாவில் உள்ள ஒற்றுமை சிலைக்கு அருகே, 'சர்தார் வல்லபாய் படேல் அதிகாரமளித்தல் மற்றும் வாழ்வாதார மையத்தை' அமைப்பதற்கான அடிக்கல்லை மத்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் நாட்டினார். பல்வேறு திறன் மேம்பாட்டுத்திட்டங்கள்மூலம் இளைஞர்கள், விவசாயிகள், சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சியளிப்பதே இந்த மையத்தின் நோக்கமாகும்.

- GMR வரலட்சுமி அறக்கட்டளை, சர்தார் சரோவர் நர்மதா நிகம் லிட் உடன் இணைந்து இம்மையத்தை நிறுவுவதற்காக ₹15 கோடிக்கும் அதிகமாக முதலீடு செய்துள்ளது.

**10.அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?**

**அ. ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா ☑**

ஆ. ஜெய் சங்கர்

இ. தரஞ்சித் சிங் சந்து

ஈ. விஜய் கோகலே



- அமெரிக்காவுக்கான இந்தியாவின் முன்னாள் தூதரான ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்க்லா, அண்மையில், இந்தியாவின் அடுத்த வெளியுறவுச் செயலாளராக பொறுப்பேற்றுள்ளார். விஜய் கோகலேவுக்குப்பிறகு இந்தப்பதவிக்கு வந்துள்ள அவர், நிலையான ஈராண்டு காலத்திற்கு இந்தப்பதவியை வகிப்பார். ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, 1984ஆம் ஆண்டைய இந்திய வெளியுறவு சேவை (IFS) அதிகாரி ஆவார்.

- கடந்த 2019 செப்டம்பரில் அமெரிக்காவின் ஹூஸ்டனில் நடைபெற்ற, "ஹவுடி மோடி" நிகழ்ச்சியை ஷ்ரிங்லா வெற்றிகரமாக தொகுத்து வழங்கினார். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியா – வங்கதேசம் நில எல்லை ஒப்பந்தம், 2015இல் அவர் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தபோது வங்கதேசத்துக்கான இந்திய உயராணையராகவும் அவர் பணியாற்றினார்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. NITI ஆயோக் வெளியிட்ட டிசம்பர் மாதத்திற்கான முன்னேற விரும்பும் மாவட்டங்களின் பட்டியலில் முதலிடம் பிடித்த மாவட்டம் எது?**

அ. கிருஷ்ணகிரி (தமிழ்நாடு)

ஆ. ஹைலாகண்டி (அஸ்ஸாம்)

இ. பெலங்கிர் (ஒடிசா)

**ஈ. சந்தௌலி (உத்தரபிரதேசம்) ☑**

- இந்திய அரசாங்கத்திற்கான மதியுரையகமான NITI ஆயோக், கடந்த 2019 டிசம்பரில் ஆறு வளர்ச்சிப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியதன் அடிப்படையில் முன்னேற விரும்பும் (aspirational) மாவட்டங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது. இந்தத் தரவரிசையின்படி, உத்தரபிரதேசத்தின் சந்தௌலி மாவட்டம் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து ஒடிசாவின் பெலாங்கிர் மாவட்டம் இரண்டாமிடத்திலும் உள்ளது. ஆந்திரபிரதேசத்தின் YSR மாவட்டம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் ஆறு வளர்ச்சிப்பகுதிகள்: நலவாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, விவசாயம் மற்றும் நீர்வளம், நிதியியல் உள்ளடக்கம், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் உட்கட்டமைப்பு.

**2.அண்மையில், அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு திருத்த மசோதா–2020இன்படி, சட்டரீதியான கருக்கலைப்புக்கான உச்சபட்ச வரம்பு என்ன?**

அ. 20 வாரங்கள்

ஆ. 28 வாரங்கள்

**இ. 24 வாரங்கள் ☑**

ஈ. 32 வாரங்கள்



- கருவுற்ற பெண்களின் கருவைக்கலைப்பதற்கு 20 வாரமாக இருக்கும் உச்சவரம்பை 24 வாரமாக உயர்த்தும் மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு திருத்த மசோதா 2020'க்கு (Medical Termination of Pregnancy (Amendment) Bill) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது, 1971ஆம் ஆண்டின் மருத்துவரீதியிலான கருக்கலைப்பு சட்டத்தை திருத்தியமைக்கும். இம்மசோதா, வரும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**3.இந்திய கடலோரக் காவல்படை, அண்மையில் தனது, 'C–448' அதிவேக படகுகளை எந்த நகரத்தில் பணிக்கமர்த்தியது?**

அ. கொச்சி

ஆ. விசாகப்பட்டினம்

**இ. மங்களூரு ☑**

ஈ. சென்னை



❖ இந்திய கடலோரக்காவல்படை அண்மையில் தனது, 'C–448' அதிவேக படகுகளை கர்நாடகாவின் மங்களூருவில் பணிக்கமர்த்தியது. C–448 என்பது ஓர் இடைமறிப்புக் கப்பலாகும். இது, மங்களூரு கடற்கரையில், ரோந்து & மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும். உலகத்தரம்மிக்க வழிசெலுத்தல் மற்றும் தகவல்தொடர்பு சாதன அமைப்புகளையும் இக்கப்பல் கொண்டுள்ளது. தேடல் நடவடிக்கைகள் மற்றும் கடல்சார் கண்காணிப்புக்கும் இது உதவுகிறது.

**4.அண்மையில் கொல்கத்தாவில் காலமான துஷார் காஞ்சிலால், எதனைச் சார்ந்தவர்?**

அ. விளையாட்டு வீரர்

**ஆ. சமூக சேவகர் ☑**

இ. அரசியல்வாதி

ஈ. இசைக்கலைஞர்




❖ 85 வயதான மூத்த சமூக சேவையாளரும் கல்வியாளருமான துஷார் காஞ்சிலால், அண்மையில் கொல்கத்தாவில் காலமானார். 1986ஆம் ஆண்டில், இந்தியாவின் நான்காவது மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான, 'பத்மஸ்ரீ' விருதைப்பெற்றவர். 'மாஸ்டர்மொஷாய்' என்று அன்பாக அழைக்கப்பட்ட இவர் கொல்கத்தாவின் ரங்கபெலியா சிற்றூரில் ஓர் உயர்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியராக பணியாற்றினார். சுந்தரவன சதுப்புநிலக்காடுகளை அழிக்கும் சிக்கலை அடிப்படையாகக்கொண்ட 'சுந்தரவனங்களைக் கொன்றது யார்?' என்ற நூலையும் அவர் எழுதியுள்ளார்.

**5. 2020 – உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?**

**அ. Towards 2030 Goals: Making the Decade Count ☑**

ஆ. Sustainable Energy across the world

இ. Attaining SDG before 2030

ஈ. Energy and Resources for all




❖ உலக நீடித்த வளர்ச்சி உச்சிமாநாடு (WSDS) என்பது எரிசக்தி மற்றும் வள நிறுவனத்தால் (TERI) ஏற்பாடு செய்யப்படும் ஒரு வருடாந்திர முதன்மை நிகழ்வாகும். இந்த ஆண்டுக்கான (2020) உச்சி மாநாடு, புது தில்லியில் உள்ள இந்திய வாழ்விட மையத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 'Towards 2030 Goals: Making the Decade Count' என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இந்த மூன்று நாள் நிகழ்வு, ஜன.29 அன்று தொடங்கப்பட்டது.

❖ பன்னாட்டுத் தலைவர்களுக்கு காலநிலை பிரச்சனைகள் குறித்து விவாதிப்பதற்கு ஒரு தளத்தை வழங்குவதற்காக, கடந்த 2001ஆம் ஆண்டு முதல் பதினெட்டு ஆண்டுகளாக இவ்வுச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு (2020), ஐ.நா அவையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை பூர்த்தி செய்வதற்கான பன்னாட்டு முயற்சிகளை மையமாகக்கொண்டு இந்நிகழ்வு நடைபெறுகிறது.

**6.சூரஜ்குந்த் சர்வதேச கைவினைத் திருவிழா என்பது எந்த மாநிலத்தால் ஏற்பாடு செய்யப்படுகிற முதன்மையான ஆண்டு நிகழ்வாகும்?**




அ. உத்தரபிரதேசம்

**ஆ. ஹரியானா ☑**

இ. இராஜஸ்தான்

ஈ. சத்தீஸ்கர்

❖ 34ஆவது சூரஜ்குந்த் சர்வதேச கைவினைத் திருவிழாவானது வரும் பிப்.1–16 வரை ஹரியானாவின் சூரஜ்குந்தில் நடைபெறவுள்ளது. இது ஹரியானா மாநில அரசால் ஏற்பாடுசெய்யப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும். ஹிமாச்சலபிரதேச மாநிலம், இந்த ஆண்டுக்கான (2020) திருவிழாவின் சிறப்பு கவனம் பெறும் மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக பல்வேறு கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இது, மாநிலத்தின் சுற்றுலாத்திறனை வெளிப்படுத்தவும், அதிகமான மக்களை மாநிலத்தை நோக்கி ஈர்க்கவும் உதவும்.

**7. Transparency Internationalஇன் அண்மைய ஆய்வின்படி, வரவுசெலவுத்திட்டம் (budget) உருவாக்கும் நடைமுறைகளில் எந்த மாநிலம் முதலிடத்தில் உள்ளது?**

অসম চৰকাৰ
GOVERNMENT OF ASSAM

அ. ஒடிசா

ஆ. ஆந்திரபிரதேசம்

**இ. அஸ்ஸாம் ☑**

ஈ. மேற்கு வங்கம்

❖ சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனமான டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் நடத்திய அண்மைய ஆய்வின்படி, வரவுசெலவுத்திட்டத்தை உருவாக்கும்போது பின்பற்றப்பட்ட சிறந்த நடைமுறைகளின் அடிப்படையில் அஸ்ஸாம் மாநிலம் முதலிடத்திலுள்ளது. மாநிலங்களை தரவரிசைப்படுத்துவதற்கான நான்கு அளவுருக்களை இந்த ஆய்வு பரிசீலித்தது. அவை: வெளிப்படைத்தன்மை, வரவுசெலவுத்திட்ட செயல்முறை, வரவுசெலவுத்திட்டத்துக்கு பிந்தைய நிதி மேலாண்மை மற்றும் வரவுசெலவுத்திட்டத்தை மிகவும் வெளிப்படையான மற்றும் குடிமக்களுக்கு உகந்ததாக மாற்றுவதற்கான முயற்சிகள்.

❖ கோவா, மகாராஷ்டிரா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் இந்தப்பட்டியலில் பின்தங்கியுள்ளன என்றும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

**8.தாய்லாந்தில் ஐ.நா. வசிப்பிட ஒருங்கிணைப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட இந்தியர் யார்?**




**அ. கீதா சபர்வால் ☑**

ஆ. ஜெய் சங்கர்

இ. தரஞ்சித் சிங் சந்து

ஈ. விஜய் கோகலே

❖ இந்தியாவின் கீதா சபர்வால் அண்மையில், தாய்லாந்தின் ஒப்புதலோடு தாய்லாந்தில் ஐ.நா., வசிப்பிட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார். கீதா சபர்வால், இலங்கையில், ஐக்கிய நாடுகள் அவையை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைதி மற்றும் மேம்பாட்டு ஆலோசகராக பணியாற்றிவந்தார். ஐ.நா வசிப்பிட ஒருங்கிணைப்பாளர்கள் ஐ.நா வளர்ச்சி அமைப்பின் பிரதிநிதிகளும் ஐ.நா. நாட்டின் அணிகளின் தலைவர்களுமாவர். 2030ஆம் ஆண்டுக்குள்ளான நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதில் அவர்கள் உறுப்புநாடுகளுக்கு உறுதுணையாக நிற்கின்றனர்.

**9.அமேசான் இந்தியா, சமீபத்தில், கிழக்கு இரயில்வேயுடன் கூட்டிணைந்து எந்த இரயில் நிலையத்தில் pick–up kiosk – பொருட்களை எடுத்துச் செல்வதற்கான சிறுகடையை அமைத்தது?**

அ. சேலம் சந்திப்பு

ஆ. பிதன் நகர்

**இ. சியால்தா ☑**

ஈ. மதுரை சந்திப்பு




❖ மின்னணு–வணிக நிறுவனமான அமேசான் இந்தியா, அண்மையில் கிழக்கு இரயில்வேயுடன் கூட்டு சேர்ந்து, கொல்கத்தாவில் அமைந்துள்ள சியால்தா இரயில் நிலையத்தில் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான சிறுகடையை அமைத்தது.

❖ அமேசான் நிறுவனத்தின் வலைத்தளம் அல்லது செயலியில் பொருட்களை வாங்கும்போது, பொருட்கள் பெற்றுச்செல்வதற்கான இடமாக வாடிக்கையாளர்கள் ரயில் நிலையத்தை தேர்ந்தெடுப்பதன்மூலம், அவர்கள் தங்களின் பொருட்களை ரயில் நிலையத்திற்கு வந்து வசதியாக எடுத்துச் செல்லலாம். கடந்த 2019ஆம் ஆண்டில், இந்திய இரயில்வேயுடன் கூட்டிணைந்து மும்பையில் உள்ள நான்கு இரயில் நிலையங்களில் அமேசான் நிறுவனம் pick–up kiosk'களை அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

**10.எந்தப் பன்னாட்டு திறன்பேசி நிறுவனம், அண்மையில், IIT ஹைதராபாத்துடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?**

அ. சயாமி (Xiaomi)

**ஆ. ஒப்போ (Oppo) ☑**

இ. ஹூவாவே (Huawei)

ஈ. விவோ (Vivo)

❖ வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களில் ஒத்துழைப்பு நல்குவதற்காக ஹைதராபாத் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பன்னாட்டு திறன்பேசி நிறுவனமான ஒப்போ கையெழுத்திட்டுள்ளது. IITஇன் ஆராய்ச்சி & மேம்பாட்டுத் துறைக்கும், ஒப்போ இந்தியாவின் தலைவருக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, பட செயலாக்கம், 5G நெட்வொர்க்குகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்களில் ஈராண்டுகளுக்கு கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 35ஆவது இந்திய சர்வதேச தோல் கண்காட்சி பிப்.01–03 வரை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறவுள்ளது. இந்திய தோல் ஏற்றுமதி தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் விதமாகவும், இந்தியாவை முதலீடு மற்றும் உற்பத்திக்கு உகந்த இடமாக மாற்றுவதோடு, வடிவமைப்பு மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான மையமாகவும் மாற்றும் நோக்கில் ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கண்காட்சி சென்னையில் நடத்தப்படுகிறது.